**“சில்பாலோக்க வேலைத்திட்டம்”**

கல்விப் பொது தராதரப்பத்திர (உ/த) பரீட்சைப் பெறுபேற்றை அதிகரித்தல் - 2021

# அரசியல் விஞ்ஞானம்

# POLITICAL SCIENCE



**மாணவர் சுயக்கற்றலுக்கான கையேடு**

**தரம் 12**

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டின் வெற்றியானது தொடர்ச்சியானதாக காணப்படவேண்டுமாயின், அவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதன் மூலமே சாத்தியமாக அமையும். மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் சுயகற்றலில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். தம் கற்றல் செயற்பாட்டை முகாமை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு, தனிப்பட்ட உந்துதல் அவசியமாவதுடன் இந்த நவீன உலகின் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமும் அதுவே ஆகும்.

கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து உலக மக்களது செயற்பாடுகள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகியுள்ளன. எனவே அனைத்து மானிட செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம். அந்தவகையில் மாணவர்களது கற்றல் செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் மத்திய மாகாணத்தின் க.பொ.த (உ/த) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீனமயப்படுத்தி, ஓர் உயர்ந்த அடைவு மட்டத்திற்கு மாணவர்களை இட்டு செல்வதற்காக இந்த கையேட்டுத் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உங்கள் கல்வி செயற்பாட்டை வடிவமைத்துக் கொள்வதுடன், இச்செயற்பாட்டிற்கு பிள்ளைகளுக்கு துணைப்புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை சமூகம் போன்றோர் எந்த நேரத்திலும் தயார் நிலையிலுள்ளார்கள் என்பதை உங்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் உங்களது சுயகற்றல் செயற்பாட்டிற்காக ஆசிரியர் குழாம், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இது ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு என்பதை அறிந்துள்ளதுடன் அதற்காக எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக உள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும் 2021 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக இக்கற்றல் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வரும் உங்களது சகோதர சகோதரிகளும் பயன்படுத்தி பயன்பெற முடியும்.

இந்த கற்றல் தொகுதியானது, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பயன்படுத்தும் போது உங்களது உயர்கல்விக்கு உறுதுணையாக அமையும் என கருதுகின்றேன். மத்திய மாகாணத்தின் அடைவு மட்டத்தை உயர்த்தும் முன்னுரிமை வேலைத்திட்டமான “ சில்பாலோக்க” வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நிதியுதவி வழங்கியதுடன் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த கற்றல் தொகுதியை வடிவமைப்பதற்கு பல்வேறு வகைகளிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது எதிர்காலத்தின் கனவு நனவாக எனது நல்லாசிகள்.

E.P.T.K. ஏக்கநாயக்க,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

# மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் Covid 19 இன் பரவல் ஆரம்பித்த உடன் பிள்ளைகளை இப்பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக 2020 March 12ம் திகதியளவில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று வரை தமது வழமையான செயற்பாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளன.

இந்நிலையை ஓரளவேனும் ஈடு செய்யும் முகமாக மத்திய மாகாணக் கல்வி திணைக்களமானது இணையம், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற டிஜிட்டல் தளங்களுடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருகிறது. எனினும் இந்த டிஜிட்டல் வளங்களை அணுகும் சந்தர்ப்பங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சீராக அல்லது ஒரே மாதிரியாக அமையாமலிருப்பது எமக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

எனவே 2021ல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி இக்கற்றல் துணையேடு சகல பாடங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு மென் பிரதிகளாக பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஆர்வம், விடாமுயற்சி, இலக்கு நோக்கிய பயணம் என்பன நமது சமூக எழுச்சிக்கான அடிப்படையான கல்வி சார் நடவடிக்கைகளாக கருதி இன்று நாம் எதிர் கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

எனவே எமது இந்த முயற்சியானது பரீட்சைக்கு உங்களை தயார் செய்து கொள்வதிலும் வெற்றிபெற செய்வதிலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தவறவிடப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை சுயகற்றலின் வாயிலாக அடையும் வகையில் இக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவச் செல்வங்கள் இக் கையேட்டினை முறையாக பயன்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவற்றை தயாரித்து வடிவமைத்து தந்து உதவிய ஆசிரியர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. ஆர். சத்தியேந்திரா,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

***E.P.T.K ஏக்கநாயக்க***
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***A.R சத்தியேந்திரா***
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

**A.L.M.சாருடீன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***வழிகாட்டல்***

***P. விக்னேஸ்வரன்***
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

*பிரதமநூலாசிரியர்*

***M.R.U ரில்வான் BA,***
***Dip. In Counseling, PGDE, M.Ed***
**உதவிக் கல்விப் பணிப்பாளர்**
**மாத்தளை வலயம்**
**Tel: 0777 802790, 071 780 2790**

**நூலாக்கள் குழு:-**

**K. B. பவ்மி (ஆ. ஆ)**
**வலயக்கல்வி காரியாலயம் - மாத்தளை**

**N. M. S. ஜெலீலா ஆசிரியர்**
**மா/அந்நூர் முஸ்லிம் வித்தியாலயம், வரக்காமுறை**

**A. L. M. சாதிகீன் ஆசிரியர்**
**மா/அல்மினா ஆரம்ப பாடசாலை - உக்குவளை**

மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

## நூல் பற்றிய அறிமுகம்

மாணவர்களின் கவனத்திற்கு, மத்திய மாகாண கல்வித்திணைக்களத்தினால் க. பொ. த. (உ/த) மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞானப் பாட சுயகற்றலுக்கான கையேடு பற்றிய சிறிய வழிகாட்டல் பின்வருமாறு.

- உயர்தர மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞான பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தரம் - 12, தரம் - 13 என வெவ்வேறாக தயாரிக்கப்பட்டுள்ளது.

- உயர்தர பரீட்சைக்காக தயாராவதற்கான வழிகாட்டல் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. இது முழுமையான விளக்கமோ விடைகளோ உள்ளடங்கியதல்ல என்பதனை கருத்தில் கொண்டு மேலதிக விளக்கங்களை தேடி கற்றுக்கொள்ள வேண்டும்.

- கடந்த கால வினா புத்தகங்கள் மற்றும் பாடநூல்களை அடிப்படையாகக் கொண்டு விடைகளை ஆயத்தப்படுத்தல் அவசியமாகும்.

- Covid - 19 விடுமுறைகளில் மாணவர்கள் வீட்டில் இருந்தவாறு சுயமாக கற்பதற்காக ஒரு வழிகாட்டலாகவே இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

- ஆசிரியர்களின் உதவியுடன் மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்வது அவசியம்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# அரசறிவியலின் தோற்றம் அரசறிவியல் ஆய்வு மற்றும் அரசறிவியலின் இயல்பு

**அரசறிவியலின் அறிமுகம் மற்றும் அதன் தோற்றமும் வளர்ச்சியும்**

மனிதன் எப்பொழுது சமூகமாக இணைந்து வாழத் தொடங்கினானோ அப்போதே அவனுடைய அரசியல் வாழ்வும் ஆரம்பமாகியது எனலாம். எனவேதான் மனிதனின் சமூக வாழ்வில் அத்தியாவசியமான ஓர் அங்கமாக அவனது அரசியல் வாழ்வும் அமைந்துவிட்டது. ஒவ்வொரு மனிதனும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரசோடு தொடர்புபட்டு காணப்படுகின்றான். இதனால் மனிதன் ஓர் அரசியல் சமூகப் பிராணி என அழைக்கப்படுகின்றான். அரசறிவியலின் தந்தை என அழைக்கப்படும் அரிஸ்டோட்டலின் கூற்றுப்படி “அரசின் தேவையில்லாதவன் ஒன்றில் மிருகமாகவோ, கடவுளாகவோ இருக்க வேண்டும்” என்கிறார். இந்த வகையில் அரசியலை கற்கும் மாணவனுக்கு மட்டுமல்லாமல் சமூகத்தில் சகலருக்கும் அரசியல் பற்றிய விளக்கம் அவசியப்படுகின்றது. இந்த வகையில் மனிதன் தான் வாழும் சூழல் மற்றும் தான் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் பற்றியும் அதற்கான தீர்வுபற்றியும் சிந்திக்க தொடங்கினான். இச்சிந்தனையானது அரசியல் பற்றிய சிந்தனையின் ஆரம்பமாக அமைந்திருந்தது.

அரசியல் கற்கையானது மிக நீண்டகால வரலாற்றையுடையதாகும். கி. மு. 4ஆம் நூற்றாண்டில் இருந்து புராதன கிரேக்கத்தின் எதன்ஸ் நகரில் அரசியலைக் கற்றல், அபிவிருத்தி செய்தல், மற்றும் பயிற்சியளித்தல் என்பன விஷேட கற்கை நிலையங்களில் நடைபெற்றன. பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் போன்ற புகழ்மிக்க கிரேக்க அரசியல் தத்துவ ஞானிகள் அரசியல் தொடர்பான ஆரம்ப கருத்தாக்களாவர்.

பிளேட்டோவின் “பிளடோனிக் அகடமி” அரிஸ்டோட்டலின் “லைசியம்” கல்வி கூடங்களில் அரசியல் கற்பிக்கப்பட்டது. அரசறிவியல் கல்வியானது புராதன கிரேக்கத்தில் மட்டுமல்லாது, புராதன ரோமபுரியிலும் சிசரோ போன்றவர்களால் வளர்க்கப்பட்டது. அவ்வாறே புராதன சீனாவில் “கொன்பியுசியசும்” புராதன இந்தியாவில் கௌடில்யரும் அரசியல் கருப்பொருட்களை எடுத்தாராய்ந்துள்ளனர்.

மத்திய காலத்தில் அரசியல், சமய செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது. அக்காலப்பகுதியில் “சென் தோமஸ் அகியுனோஸ்” சென் அகஸ்டின் போன்றவர்களால் அரசியல் பற்றிய விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

கி. பி. 15ஆம் நூற்றாண்டில் இத்தாலிய அறிஞரான “மாக்கியவல்லி” அவரது இளவரசன் என்ற நூலில் அதிகாரத்தை மையப்படுத்தி அரசியல் ஆய்வுகளை மேற்கொண்டார். அவர் சம்பிரதாய அரசியலில் இருந்து விடுபட்டு சமயத்தையும் அரசியலையும் வேறுபடுத்தி விளக்கமளித்தார். மாக்கியவல்லி நவீன அரசறிவியலில் தந்தை என அழைக்கப்படுகின்றார். இவரைத் தொடர்ந்து தோமஸ், ஒப்ஸ், ஜோன் லொக், ரூசோ என பலரும் அரசறிவியலுக்கு பங்காற்றினர்.

தற்காலத்தில் அரசறிவியல் பரந்தளவில் சமூக கற்கை நெறியாக வளர்சியடைந்துள்ளது. அரசை மையமாகக் கொண்டு அரசோடு தொடர்புடைய சகல விடயங்களையும் ஆராயும் துறையாக வளர்ச்சியடைந்துள்ளது. எனவே கி. மு. 4ஆம் நூற்றாண்டில் கிரேக்கத்தின் எதன்ஸ் நகரில் அரசியல் என்ற பெயரில் ஆரம்பமாகிய இப்பாடம் இன்று அரசறிவியல் என மாற்றமடைந்து பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்பட்டு வருகின்றது.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம் - தமிழ் பிரிவு

## அரசறிவியல்

மனிதன் சமூகமாக வாழ ஆரம்பித்தபோதே அரசறிவியல் பற்றிய கல்வியும் ஆரம்பமாகிவிட்டது. இந்த வகையில் அரசறிவியல் என்பது அரசைப் பற்றிய கல்வி, தேசத்தை ஆட்சி புரிதல், எனவும் சுருக்கமாக கூறலாம். இந்த வகையில் அரசறிவியல் என்றால் என்ன என்பதற்கு விடை காண பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும்.

i. அரசறிவியல், கி. மு. 4ஆம் நூற்றாண்டில் ஆரம்பமான புராதன கற்கை துறையாகும்.
ii. அரசறிவியலின் இயல்பு, பாடப்பரப்பு, உள்ளடக்கம், விதிமுறைகள், கோட்பாடுகள் என்பன பல்வேறு விருத்திகளினால் சுமார் 2500 வருடங்களாக கட்டியெழுப்பப்பட்டு மாற்றமடைந்தும் வளர்ச்சியடைந்தும் வந்துள்ளது.
iii. அரசறிவியலின் அணுகு முறைகள் கோட்பாடுகள், விதிமுறைகள் என்பவற்றில் பன்மைத்துவம் காணப்படுவதோடு அவை பல்வேறு குருகுலக் கல்வி நிலையங்கள் சம்பிரதாயங்களுடன் காணப்படுகின்றது.

அரசியல் என்பது அரசறிவியல் கல்வியாக கற்றலாகும்

அரசியல் என்றால் தேசத்தை ஆட்சி புரிதல் என சுருக்கமாக குறிப்பிடலாம். அரசைப் பற்றிய கற்கை அரசியலாகும். புராதன கிரேக்கம் மற்றும் இந்திய, சீன தத்துவஞானிகள் அரசியல் என்பது அரசைப் பற்றிய கற்கையாகவே கருதினர்.

15ஆம் நூற்றாண்டின் நவீன காலத்தின் ஆரம்பத்துடன் அதிகாரத்தை மையப்படுத்தி மாக்கியவல்லி அரசறிவியலை ஆராய்ந்தார். அவரை தொடர்ந்து பலரும் இக்கருத்தை மையமாக கொண்டு அரசறிவியலை ஆராய்ந்தனர். அரசியல் என்பது அரசியலைப் பற்றிய கற்கை என்ற வகையில் அரசியல் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்களை கற்றல், ஆய்வு செய்தல், விபரித்தல், அரசியல் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களை விமர்சனத்துக்கு உட்படுத்தல், புதிய கோட்பாடுகள், எண்ணக்கருக்களை கட்டியெழுப்புதல், நடைமுறை அரசியல் கொள்கைகள் முறைகளை விமர்சனத்திற்கு உட்படுத்தி மாற்றுப் பிரேரனைகளை முன்வைத்தல் என்பனவாகும். இந்த வகையில் அரசியல் என்பது அரசைப் பற்றிய கற்கையாகும்.

அரசியல் என்பது ஒரு சமூக பயன்பாடாகும்

அரசியல் என்பது அரசு, அரசாங்கம், அரச நிருவாகம் போன்ற துறைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் அதற்கு வெளியில் சமூகப் பிரச்சினைகளுக்கிடையில் சமூகத்தில் பல்வேறு முறைகளில் நடைபெறும் சமூகப் பயன்பாடு என்பதே இதன் பொருளாகும். இதன்படி பிரஜைகளின் அரசியல் பங்குபற்றுதல் இல்லாமல் அரசியல் காணப்பட மாட்டாது.

அரசியல் செயற்பாடுகளுக்கு அரசு என்ற பரப்பு அல்லது அரசாங்கம் மிகவும் முக்கியமானதாக காணப்படினும், அரசின் பரப்புக்கு வெளியிலும் அரசியல் இடம்பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அரசியல் என்பது ஒரு சமூகப் பயன்பாடு என்ற வகையில்....

- தேர்தலில் வாக்களித்து ஆட்சியாளர்களை தெரிவு செய்தல், ஆட்சியாளர்களுக்கு நாட்டை ஆளுவதற்கான அதிகாரத்தை வழங்குதல்.
- அரசியல் கட்சிகளில் உறுப்பினர்களாக இணைந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.
- பொதுகூட்டங்களில் பங்குகொள்ளுதல், ஊர்வலங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கு கொள்ளுதல், வேலைநிறுத்த போராட்டங்களில் மற்றும் தொழில்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
- தமது உறவினர்கள், அயலவர்களுடன் அரசியல் தொடர்பாடல்களில் ஈடுபடுதல் என்பன மூலம் சமூக பயன்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

## அரசறிவியலின் பாடப்பரப்பு

**அறிமுகம்:**

- அரசறிவியல் ஓர் சமூக விஞ்ஞானப்பாடமாகும். அத்தோடு இயங்கு தன்மையுடைய பாடமாகவும் விளங்குகின்றது.
- காலத்திற்கு காலம் புதிய விடயங்கள் அரசறிவியல் பாடப்பரப்புக்கள் சேர்ந்து கொள்வதோடு அதன் மூலம் பழைய விடயங்கள் முக்கியத்துவம் இழப்பதனையும் காணலாம். இது அரசறிவியல் கற்கையின் வளர்ச்சியின் இயல்பாகும்.
- எனவே அரசறிவியல் பாடப்பரப்பு தொடர்பாக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தனிக்கருத்து காணப்படுவதில்லை.
- அரசறிவியல் பாடப்பரப்பானது பரந்து விரிந்து செல்கின்ற ஒரு பாடப்பரப்பாகும்.
- கிரேக்க காலம் முதல் இன்றுவரை அதன் படிமுறையான வளர்ச்சி போக்கை ஆராய்கின்றபோது இதனைக் கண்டு கொள்ளலாம்.

**படிமுறையான வளர்ச்சி போக்கு**

- அரசறிவியல் ஒரு முறையான பாடம் என்ற வகையில் 2500 வருடங்களுக்கு முன்னரே அதன் கற்கை ஆரம்பமானது. கி. மு. 4ஆம் நூற்றாண்டில் புராதன கிரேக்கத்தில் பிளேட்டோ, அரிஸ்டோட்டில் அரசியல் என்பது அரசை பற்றிய கற்கை என்ற வகையில் அரசை மையமாகக் கொண்டு விளக்கமளித்தனர்.

- 15ஆம் நூற்றாண்டில் நவீன காலத்தின் ஆரம்ப பகுதியில் தேசிய அரசுகளின் தோற்றத்தோடு அதிகாரம் என்ற காரணி அரசியல் பாடப்பரப்பில் பிரதான இடத்தைப் பெற்றது தேசிய அரசுகளின் உள்வாரியானதும் வெளிவாரியானதுமான இருப்பின் மீது அதிகாரமானது பிரதான அம்சமாக காணப்பட்டதே இதற்கு காரணமானது. மாக்கிய வல்லி இதனை ஆரம்பித்து வைத்தார். அதிகாரம் பற்றிய கற்கையே அரசறிவியலாகும் என்பதாகும்.

- 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் முடியாட்சியின் வீழ்ச்சியும் ஜனநாயகத்தின் வளர்ச்சியும் அரசறிவியல் பாடப்பரப்பில் புதிய விடயங்கள் இணைவதற்கு வழிவகுத்தன. சட்டத்துறை, நீதித்துறை, அதிகார வேறாக்கம், சட்டம், சட்டத்தின் ஆட்சி, பாராளுமன்றம், அரசியல் அமைப்பு. பிரதிநிதித்துவ முறைகள், அரசியல் கட்சிகள், அமுக்க குழுக்கள், பொதுசன அபிப்பிராயம் என்பன அவற்றில் சிலவாகும்.

- முதலாளித்துவத்தின் எழுச்சியோடு தனிமனித சுதந்திரம், மனித உரிமைகள், 1917 ரஷ்யப் புரட்சியும் கம்யூனிச மற்றும் பாசிச கருத்துக்களும் பாடப்பரப்பில் இணைந்து கொண்டமை.

- 1945 இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் புதிய அரசுகளின் தோற்றம், தேசியவாதம், மோதல் முகாமைத்துவம், சர்வதேச அரசியல், பொது கொள்கை உருவாக்கம், அரசியல் கலாசாரம், அரசியல் சமூகமயப்படுத்தல், சிவில் சமூகம், நல்லாட்சி என பல்வேறு விடயங்கள் பாடப்பரப்பில் இணைந்து கொண்டன.

இவ்வாறு அரசறிவியல் பாடப்பரப்பானது கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப நாளாந்தம் மாற்றங்களுக்கு உட்பட்டும் வளர்ச்சியடைந்தும் வருவதை காணலாம். அரசறிவியல் இயங்கு தன்மை பொருந்திய பாடமாக இருப்பதோடு அதன் பாடப்பரப்பும் மாற்றமடைந்தும் வளர்ச்சியடைந்தும் செல்கின்றது எனலாம்.

## அரசியலும் அரசறிவியலும்

அரசியல் என்பது மனிதர்கள், அரசு அரசாங்கம் மற்றும் அரசியல் அதிகாரம் ஆகியவற்றுக்கிடையிலான அந்நியோன்ய செயற்பாடாகும். இச்செயற்பாட்டை பிரதானமாக இரு பகுதிகளாக இனங்காண முடியும்.

(i) அரசியல் - பிரயோக அரசியல், நடைமுறை அரசியல்
(ii) அரசறிவியல் - கோட்பாட்டு அரசியல்

**பிரயோக அரசியல்**

பிரயோக அரசியல் (அரசியல்) என்பது அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகத்தில் அரசியல் போராட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரயோக செயன்முறையாகும். அதாவது, நடைமுறை அரசியலாகும். இங்கு அரசியல் போராட்டத்தோடு நேரடியாக தொடர்புபடும் அரசியல்வாதிகளினதும் அரசியல் கட்சிகளினதும் செயற்பாடுகளே முக்கியத்துவம் பெறுகின்றன. ஓர் அரசியல் முறைமை எதிர்கொள்ளும் அரசியல், சமூக. பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும் முன்வைக்கும் தீர்வுகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இடையில் நிலவும் வேறுபாடுகளின் அடிப்படையிலேயே அரசியல் இடம்பெறுகின்றது.

- பிரயோக அரசியலானது அரசியல் அதிகாரமும் போராட்டமும் இணைந்த பிரயோக செயன்முறையாகும்.
- அரசியலின் நோக்கம் அதிகாரத்தை கைப்பற்றுவதும் அதனை உறுதிப்படுத்துவதும் பரவலாக்குவதுமாகும்.
- அரசியல் சமூகம் எதிர்நோக்கும் அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எதிர்குழுக்கள் முன்வைக்கும் தீர்வுகளுக்கிடையில் முரண்பட்ட தன்மை காணப்படும்.
- பிரயோக அரசியல் அனுபவம் சார்ந்த காரணிகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் கலையாகும்.

**அரசறிவியல் - கோட்பாட்டு அரசியல்**

கோட்பாட்டு அரசியல் (அரசறிவியல்) என்பது அரசறிவியலின் கற்கை பகுதியாகும். அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகத்தில் மனிதர்களின் பொது நன்மைகளை ஒழுங்கமைத்து விருத்தி செய்யும் நோக்கில் எதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதனை விஞ்ஞான ரீதியாக கற்கும் ஒரு பாடமாகும். அரசியல் விஞ்ஞானம் 2500 வருடங்களாக படிமுறையாக வளர்ச்சியடைந்து வந்திருப்பதோடு அவ்வவ் காலப்பகுதிகளில் வாழ்ந்த அரசியல் சிந்தனையாளர்களும், தத்துவ மேதைகளும் தமது சம காலத்தில் நிலவிய அரசியல் முறைமைகள், அரசியல் நிகழ்வுகள் தொடர்பாக முன்வைத்த பரந்த கருத்துக்களை உள்ளடக்கியதொன்றாகும்.

- பிரயோக அரசியலின் கற்கை பகுதியே கோட்பாட்டு அரசியலாகும்.
- கோட்பாட்டு அரசியலின் பாடப்பரப்பு காலசூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றமடைந்தும், வளர்ச்சியடைந்தும் செல்லும் இயல்புடையதாகும்.
- அரசியல் விஞ்ஞானத்தின் செயற்பாடானது அரசியலை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்யும் ஒரு கற்கையாகும்.

## அரசறிவியலை கற்கும் வழிமுறைகள்

அரசறிவியல் சமூகத்தை கருப்பொருளாக கொண்டதொரு சமூகவியல் பாடமாகும். அரசறிவியலும் அரசியற் கருத்துக்களும் வளர்ந்து வரும் இக்காலகட்டத்தில் அரசறிவியல் தொடர்பான ஆய்வுகளும், கற்கை நெறிகளும் பல்கிப் பெருகியுள்ளன. இந்த வகையில் மக்கள் அரசியலை கற்கும் வழிமுறைகளை நோக்கும் போது அதனை இரு வகையான வழிமுறைகளின் ஊடாக கற்றுக் கொள்கின்றனர்.

(i) முறைசார் வழிமுறை
(ii) முறைசாரா வழிமுறை

**(i) முறைசார் வழிமுறை**

பாடத்திட்டத்தின் அடிப்படையில் நிறுவன மயப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் ஊடாக ஒரு முறையான ஒழுங்கமைப்பின் கீழ் அரசியல் விடயங்களையும் அதனுடைய நடைமுறைகளையும் ஆய்வு செய்தல் முறைசார் வழிமுறைகளாகும். பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் முறையாக ஒழுங்குப்படுத்தப்பட்ட அரசியல் கல்வி வேலைத்திட்டங்கள் போன்றன முறைசார் ஊடகங்களாகும். இவை பாடம் சார்ந்த கல்வியை வழங்குகின்றன. இங்கு கோட்பாடுகள் அவற்றின் பிரயோகம் மற்றும் அவை இரண்டுக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமை என்பன கற்பிக்கப்படுகின்றன. இந்த வகையில் முறைசார் வகையில் பின்வருமாறு அரசியலைக் கற்றுக் கொள்கின்றனர்.

- ✓ பாடசாலையிலும் பல்கலைக்கழகம் மற்றும் கலவி நிறுவனங்களிலும் பாடவிதானத்தின் மூலமாகவும் பாடவிதானத்துக்கு வெளியேயான வெளிவாரி செயற்பாடுகள் மூலமாகவும் மனிதர் அரசியலை கற்றுக் கொள்கின்றனர்.
- ✓ கல்வி நிறுவனத்தில இணைப்பாடவிதான செயற்பாடுகள் Eg:- விளையாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டி, தேசிய தின கொண்டாட்டம், சிறுவர் பாராளுமன்ற நிகழ்வுகள், விவாதப் போட்டி என்பன மூலமாகவும் அரசியலின் அடிப்படை பண்புகளை கற்றுக்கொள்கின்றனர்.

**(ii) முறைசாரா வழிமுறை**

பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொள்ளாது நிறுவனமயப்படுத்தப்படாத வெளிவாரியான விடயங்களின் அடிப்படையில் அரசியலை கற்பது முறைசாரா வழிமுறை எனப்படும். குடும்பம், சமய நிறுவனங்கள், ஊடகங்கள், சமவயதுக் குழுக்கள், அபிப்பிராயத் தலைவர்கள், பொருளாதார காரணிகள், அரசியல் கட்சிகள், அரசாங்கம் மற்றும் வேறும் பல விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள், அரசியல் தன்மைப் பெறும் வேறு செயற்பாடுகள் போன்ற முறைசாரா வழிமுறைகள் மூலமாகவும் அரசறிவியலை கற்றுக்கொள்கின்றனர். இந்த வகையில் மனிதர் அரசியலை கற்றுக்கொள்ளும் முறைசாரா வழிமுறைகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- ✓ குடும்பம்
- ✓ சுமய நிறுவனங்கள்
- ✓ ஊடகங்கள்
- ✓ சமவயதுக் குழுக்கள்
- ✓ அபிப்பிராயத் தலைவர்கள்
- ✓ பொருளாதார காரணிகள்
- ✓ அரசாங்கம்
- ✓ அரசியல் கட்சிகள்

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# அரசியலை கற்பதன் பயன்களும் முக்கியத்துவமும்

அரசியல் என்பது அரசைப் பற்றி கற்பதாகும். அரசியல் மனித வாழ்வின் மிக முக்கியமான அங்கமாகும். அரசியல் மனித வாழ்வின் சகல துறைகளிலும் பரவிக் காணப்படுகின்றது. அரசியலில் இருந்து எவரது வாழ்க்கையையும் பிரித்து வைக்க முடியாது. அரசியல் அறிவு தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் ஏதோவொரு வகையில் உதவக்கூடியதாக உள்ளது. இதனால் அரசியல் கல்வி அரசியல் மனிதனின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக உள்ளது. இந்த வகையில் அரசியலை கற்பதன் பயன்களையும் அதன் முக்கியத்துவத்தையும் பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

- அரசியல் என்பது மனித வாழ்வுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதனால் அதனை முறையாக கற்பது அவசியமாகும்.
- மனிதன் தாம் வாழும் அரசியல் முறையின் அரசியல் கட்டமைப்பு, அரசியல் நிறுவனங்கள், அரசியல் நிகழ்வுகள், பகுப்பாய்வுகள் பற்றிய தெளிவினை பெற்றுக்கொள்ள முடியும்.
- அரசியலை முறையாக விஞ்ஞான ரீதியாக கற்பதன் மூலம் மாணவர்கள் மனித விழுமியங்களை வளர்த்துக்கொள்ள உதவுகின்றனர்.
- அரசியல் கருத்தியல், அரசியல் தத்துவங்கள் மற்றும் அரசியல் கோட்பாடுகளை கற்பதன் மூலம் மாணவர்கள் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள உதவுகின்றது.
- அரசியல் பகுப்பாய்வு மற்றும் அரசியல் விமர்சனங்களை முன்வைக்கும் திறனை பெற்றுள்ளனர்.
- அரசியல் மூலக் கொள்கைகள், அரசியல் விழுமியங்கள் போன்றவற்றை விளங்கிக் கொள்வதன் மூலம் பிரஜைக்குரிய பண்புகள் விருத்திவிருத்தியடைதல்.
- அரசியல் சமூகமயப்படுத்துவதற்கும், ஒழுங்கமைவதற்குமான தெளிவு மற்றும் வழிகாட்டல் கிடைக்கின்றது.
- இராஜதந்திர சேவைகளுக்கு அவசியமான அறிவினைக் கொண்ட படித்த பிரஜைகளை உருவாக்க முடிகின்றது.
- அரசியலின் அனைத்துப் பிரிவுகளையும் கற்பதற்கான வாய்ப்பு கிடைக்கின்றமையால் தொழில்சார் அரசியல்வாதியாகவும் நிர்வாகியாகவும் வர எதிர்பார்க்கின்றவர்களுக்கு தேவையான அறிவு மற்றும் பயிற்சி கிடைத்தல்.
- அரசியல் செயற்பாட்டாளர் ஆவதற்கு மற்றும் அரசியல் பிரசாரங்களை மேற்கொள்ள உதவுகின்றது.
- அரசியல் 2500 ஆண்டு காலமாக கற்பிக்கப்பட்டு வருவது அதன் பயன் மற்றும் முக்கியத்துவத்திற்கு சான்றாக அமைகின்றது எனலாம்.

ஓர் அரசில் வாழும் பிரஜை என்ற வகையில் ஒவ்வொரு மனிதனும் அரசு தொடர்பான விளக்கம் பெற்று விளங்குவது மிகவும் முக்கியமானதாகும். அப்போதுதான் பிரஜைகளின் அரசியல் பங்கேற்புக்கு ஏற்ப அரசியலும் ஒழுங்கமையும். இது ஜனநாயக ஆட்சியின் வெற்றிக்கு அடிப்படையுமாகும். எனவே பிரஜை என்ற வகையிலும் அரசறிவியலை கற்கும் மாணவர் என்ற வகையிலும் அரசறிவியலை கற்பதனால் மேற்கூறிய வகையில் பல்வேறு வகையிலான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடிவதால் அரசியல் பற்றிய கற்கையானது முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

## மெய்யியல் அணுகுமுறை – தத்துவார்த்த அணுகுமுறை

அரசறிவியல் ஆய்வில் முதலில் பயன்படுத்தப்படடதும் மிக நீண்ட கால வரலாற்றையுடையதுமான அணுகுமுறையாக மெய்யியல் அணுகுமுறையை குறிப்பிடலாம். இது தத்துவார்த்த அணுகுமுறை

எனவும் அழைக்கப்படுகின்றது. அரசியலின் உண்மை நிலையையன்றி கற்பனையில் உதித்த அரசியல் நிலையினை ஆராய்கின்றது. பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் இவ்வாய்வு முறையின் முன்னோடிகளாவர்.

**மெய்யியல் அணுகுமுறையின் பண்புகள்**

- ✓ அரசியலின் உண்மை நிலையையன்றி கற்பனையில் உதித்த அரசியல் நிலையினை ஆராய்கின்றது.
- ✓ இவ்வாய்வு முறையில் முதலில் இலட்சிய மாதிரி பற்றிய கருதுகோள்கள் மேற்கொள்ளப்படும். பின்னர் அந்த இலட்சிய மாதிரிகளை நடைமுறைப்படுத்தக்கூடிய அரசியல் நிறுவனங்களின் தன்மை கவனத்தில் எடுக்கப்படும்.
- ✓ இலட்சிய அரசின் தன்மை, நோக்கம், கடமை, எதிர்காலம் என்பனபற்றி கட்டியெழுப்பும் தத்துவார்த்த எண்ணக்கருக்களை நடைமுறைநிலைகளோடு தொடர்புபடுத்தி அரசு, அரசாங்கம் பற்றிய கோட்பாடுகள் உருவாக்கப்படுகின்றன.
- ✓ அரசுக்குறிய இலட்சியங்கள், அறம், உண்மை, உயர்ந்த கோட்பாடுகள், ஒழுக்கம் என்பவற்றின் அடிப்படையில் அரசையும் அரசின் செயற்பாடுகளையும் ஆராய்கின்றது.
- ✓ காரண காரியத் தொடர்புகளின் அடிப்படையிலன்றி முடிவுக்கு வராது முன்னோரே வகுத்துக் கொண்ட முடிவுகளை நிரூபிப்பதற்காக காரண காரியங்கள் பயன்படுத்தப்படும்.

## வரலாற்று அணுகுமுறை

அரசினதும், அரசாங்கத்தினதும், அரசாங்க நிறுவனங்களினதும் வரலாற்று ரீதியான தோற்றம், வளர்ச்சி என்பவற்றை பரிசீலனை செய்வதன் மூலம் அவற்றின் தன்மைகளையும் செயற்பாட்டினையும், விளங்கிக் கொள்ள மேற்கொள்ளும் முயற்சியே வரலாற்று அணுகுமுறை எனப்படுகின்றது. அதன்படி அரசினதும் மற்றும் நிறுவனங்களினதும் தோற்றம், வளர்ச்சி என்பவற்றை பரிசீலித்து அவற்றின் இயல்புகள் தற்கால நிலை மற்றும் எதிர்கால போக்குகள் என்பவற்றை ஆய்வு செய்ய முயற்சிக்கின்றது. அரிஸ்டோட்டில் வரலாற்று அணுகுமுறை ஆய்வாளர்களின் முன்னோடியாவார்.

வரலாற்று அணுகு முறையின் பண்புகள்

- ✓ அரசியல் தோற்றப்பாடுகளை அவற்றின் வரலாற்று ஆதாரங்களுடன் முறையாக ஆய்வு செய்கின்றது.
- ✓ அரசியல் நிறுவனங்களின் வரலாற்று வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் தற்கால நிலையை ஆராய்ந்து எதிர்கால போக்குகளை தெளிவுபடுத்துகின்றது.
- ✓ அரசியல் நிறுவனங்களை அவை இருக்கும் நிலையின் ஊடாக ஆராய்வதனைவிட அந்நிறுவனங்கள் கடந்த காலத்தில் எவ்வாறு காணப்பட்டன, அவை இன்றைய நிலையை அடைவதற்கு எத்தகையை பாதிப்புக்கள் செலுத்தப்பட்டன என்பவற்றை கண்டறிந்தது. அவற்றில் இருந்து அவற்றின் எதிர்கால போக்குகள் எதுவாக இருக்கும் என்பதனைக் கண்டறிவதாகும்.

## நடத்தைவாத அணுகு முறை

அரசியலில் ஈடுபடும் மனிதனதும் மனிதக் குழுக்களினதும அரசியல் நடத்தைகளை விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி ஆராய்ந்து அதனூடாக அரசியலை பற்றி விளக்கும் ஆய்வு முறையே நடத்தைவாத அணுகுமுறை எனப்படுகின்றது. நடத்தைவாதம் என்பது 20ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் அமெரிக்காவில் அறிமுகமாகி இரண்டாம் உலகப் போரின் பின்னர் அரசறிவியலில் பிரபல்யமான ஒரு முறையாக பின்பற்றப்படுகின்றது. பேராசிரியர் சார்ள்ஸ் ஈ மரியம் நடத்தைவாத இயக்கத்தின் தந்தை என போற்றப்படுகின்றார்.

நடத்தை வாத அணுகுமுறையின் பண்புகள்

- ✓ அரசியல் செயன்முறையில் மனித நடத்தையை அடிப்படையாகக் கொண்ட ஓர் அணுகுமுறையாகும். அதன்படி அரசியலில் ஈடுபடும் மனிதனும் மனிதக் குழுக்களும் அரசியல் ஆய்வின் கருப்பொருளாகும்.
- ✓ மனித நடத்தையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கற்கைமுறையாக காணப்படுகின்றது. அத்தோடு சரியான நிலையில் உறுதிப்படுத்தப்படும் விடயங்களை மட்டும் பரிசோதனையில் பயன்படுத்துகின்றது.
- ✓ பெறுமதிசாரா கற்கை முறையாக இருப்பதோடு விஞ்ஞான ரீதியான பரிசோதனைகளின் மூலம் நிரூபிக்கக்கூடிய விடயங்களிலேயே கவனம் செலுத்துகின்றது.

## பெண்ணியல்வாத அணுகுமுறை

அரசியல் விடயங்களை பெண்ணியல்வாத நோக்கில் கற்கும் முறையே பெண்ணியல்வாத அணுகுமுறையாகும். பெண்ணியல்வாதம் ஒரு கற்கை நெறியாக 1970களில் வளர்ச்சியடைந்தது. ஆண்களுக்கு சமனாக பெண்களுக்கும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக சம உரிமைகளை வழங்குவதனை நோக்காகக் கொண்ட கருத்தியல்களினதும் இயக்கங்களினதும் கூட்டு மொத்தமே பெண்ணியல்வாதமாகும். கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கான சமத்துவம் மற்றும் உரிமைகளுக்காக வாதிடும் இப்பகுதியினர் பெண்ணியல் வாதிகள் என அழைக்கப்படுகின்றனர்.

பெண்ணியல்வாத அணுகுமுறையின் பண்புகள்.

- ✓ அரசு, அரசியல் அதிகாரம், ஜனநாயக வாதம், பொதுவுடமைவாதம், சுதந்திரம், சமத்துவம், நீதி நியாயத்தன்மை, உரிமைகள், பாரபட்சம் காட்டுதல், அழுத்தம், எதிர்ப்பு, அரச கொள்கை பிரஜா உரிமை போன்ற அரசியலில் காணப்படும் முக்கிய எண்ணக் கருக்களாகிய இவை அனைத்தும் பால்நிலை என்ற பிரிப்பு தொடர்பில் மீளாய்வுக்குட்படுத்துதலும் அவற்றின் விடயப்பரப்புகளில் பால்நிலை தொடர்பான அணுகுமுறைகளை சேர்த்தல்.
- ✓ இனம், வகுப்பு, உருவம், பிரதேசம் போன்ற அரியலில் முக்கிய எண்ணக்கருக்களில் ஆண் - பெண் பால்நிலையை இணைத்துக்கொள்ளல்.
- ✓ மனிதன் மற்றும் விடுதலை தொடர்பில் பாரம்பரிய தத்துவத்திற்கு பெண் விடுதலை என்பதனையும் இணைத்துக் கொள்ளல்.

குறிப்பு:-

இவை முழுமையான விடைகளோ அல்லது விளக்கமோ இல்லை. இங்கு தரப்பட்டிருப்பது மாணவர்களுக்குத் தேவையான சிறுகுறிப்பு மாத்திரமே என்பதனை கருத்தில் கொள்ளவும். இதனைவிட மேலதிமாக வாசித்து எழுத வேண்டும். அதற்கான உசாத்துணை நூல்களை வாசிக்கவும்.

உசாத்துணை நூல்கள்

1. கடந்தகால வினாவிடை புத்தகம் மற்றும் புள்ளி வழங்கல் திட்டம் (பரீட்சை திணைக்களம்)
2. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி – தரம் - 12 (NIE)
3. அரசறிவியல் ஓர் அறிமுகம் - பாகம் I, II – A.C.M. பளீல்
4. அரசியல் விஞ்ஞானம் - 12, கந்தையா சங்கரலிங்கம்

பயிற்சி வினாக்கள்

1. அரசியல் என்பது ஒரு சமூகப் பயன்பாடாகும். விளக்குக. (2019 – புதிய பாடத்திட்டம்)
2. அரசியல விஞ்ஞானத்தை கற்பதன் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுக. (2019 – பழைய பாடத்தட்டம்)
3. மனிதர் எவ்வாறு அரசியலை கற்றுக் கொள்கின்றனர். (A/L – 2017)
4. பிரயோக அரசியலிலிருந்து கோட்பாட்டு அரசியலை நீர் எவ்வாறு வேறுபடுத்துவீர். (A/L – 2015, 2014)
5. அரசியல் விஞ்ஞானம் இயங்கு தன்மை பொருந்திட ஒரு பாடமாக இருப்பதோடு அதன் பாடப்பரப்பு நாளாந்தம் வர்ச்சியடைகின்றது. நீர் உடன்படுவீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக. (A/L – 2012)

6. பின்வரும் அணுகு முறைகளில் இரண்டை விளக்குக.
   (i) தத்துவார்த்த அணுகுமுறை
   (ii) வரலாற்று அகுமுறை
   (iii) நடத்தைவாத அணுகுமுறை
   (iv) பெண்ணியல்வாத அணுகுமுறை
   (v) ஒப்பீட்டு அணுகுமுறை

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## பகுதி - A

1. புராதன கிரேக்கத்தின் அரசியல் சிந்தனையாளர்கள் அருவர் அரசியல் கற்கையினுடைய ஸ்தாபகர்களாக கருதப்படுகின்றனர். அவர்கள் இருவர்களினதும் பெயரை குறிப்பிடுக.
   (i)..............................................................................................................................
   (ii).............................................................................................................................

2. அரசியல் சிந்தனையின் வளர்ச்சி பங்களித்த புராதன இந்திய அரசியல் சிந்தனையாளர் ஒருவரினதும் சீன அரசியல் சிந்தனையாளர் ஒருவரினதும் பெயர்களைக் குறிப்பிடுக.
   (i)..............................................................................................................................
   (ii).............................................................................................................................

3. இரண்டு பிரித்தானிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்கள் "இயற்கை நிலை" தொடர்பாக இரண்டு வேறுபட்ட வழிமுறைகளில் விபரித்துள்ளனர் அவர்கள் இருவரினதும் பெயர்களைத் தருக.
   (i)..............................................................................................................................
   (ii).............................................................................................................................

4. அரசறிவியலை கற்பதற்கான இரு நவீன அணுகுமுறைகளை குறிப்பிடுக.
   (i)..............................................................................................................................
   (ii).............................................................................................................................

5. மனிதர் அரசியலை கற்கும் முறைசாரா வழிமுறைகள் இரண்டை குறிப்பிடுக.
   (i)..............................................................................................................................
   (ii).............................................................................................................................

6. வரலாற்று அணுகு முறையின் பண்புகள் இரண்டை தருக.
   (i)..............................................................................................................................
   (ii).............................................................................................................................

7. அரசறிவியலை கற்பதன் பயன்கள் மற்றும் முக்கியத்துவம் இரண்டை குறிப்பிடுக.
   (i)..............................................................................................................................
   (ii).............................................................................................................................

8. பின்வரும் நூல்களின் ஆசிரியர்கள் யார்
   (i) குடியரசு..................................................................................................................
   (ii) அரசியல்.................................................................................................................

9. அரசியல் விஞ்ஞான பரிசீலனைக்கான மரபுரீதியான அணுகு முறைகள் இரண்டைத் தருக.
   (i)..............................................................................................................................
   (ii).............................................................................................................................

10. மத்திய கால கிறிஸ்தவ அரசியல் சிந்தனையாளர் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
   (i)..............................................................................................................................
   (ii).............................................................................................................................

மருதம் பாடசாலை கலைத்திணைக்களம்

# அரசியல் கட்சிகள்

## அரசியல் கட்சிகளும் அதன் பணிகளும்

இன்றைய பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாக அரசியல் கட்சிகள் விளங்குகின்றன. மக்களை அரசாங்கத்தோடு இணைத்து வைக்கும் இணைகரமாக செயற்படுகின்றது. இந்த வகையில் அரசியல் கட்சி என்பது தங்களில் இருந்து வேறுபட்ட கருத்துக்களையுடைய கூட்டங்களோடு போட்டியிட்டு ஓர் அரசியல் அங்கமாக பணிபுரிந்து மக்களின் வாக்குரிமை சக்தியால் அரசாங்க அதிகாரங்களை கட்டுப்படுத்தி தங்களது பொதுத்தேவைகளையும் கொள்கைகளையும் நிறைவேற்ற முயலும் மக்களின் அமைப்பே அரசியல் கட்சிகளாகும்.

## அரசியல் கட்சிகளின் பண்புகள்

- ✓ தமக்கேயுரிய அரசியல் பொருளாதார கொள்கையை கொண்டிருத்தல்.
- ✓ மக்களின் பங்கேற்பை பெற்றுக்கொள்ளல்.
- ✓ அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் போராட்டத்தில் ஈடுபடுதல்.
- ✓ அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவ் அரசியல் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடுதல்.
- ✓ அரசியல் கட்சிகள் தமது அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் அதிகரித்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

## அரசியல் கட்சிகளின் பணிகள்

- ✓ சமூகத்தில் சிதறிக்கிடக்கும் பொதுசன அபிப்பிராயத்தை ஒழுங்குபடுத்துதல்.
- ✓ மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்தல்.
- ✓ சமூக சக்தியினை அதிகார சக்தியாக மாற்றுதல்.
- ✓ பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் தேவையான கொள்கைகளை உருவாக்குதலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதும்.
- ✓ மக்களின் மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்தலும் அவற்றுக்காக குரல் கொடுத்தலும்.
- ✓ பொதுமக்களை அரசியல் ரீதியாக அறிவூட்டுததலும் பொதுப் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடி கருத்தாடங்களை மேற்கொள்ளுதல்.
- ✓ எதிர்கால அரசியல் தலைவர்களை உருவாக்குதலும் பயிற்றுவித்தலும்.
- ✓ அரசியல் நவீனப்படுத்தல்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# அமுக்க குழுக்கள் - **Pressure Groups**

அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதையும், பிரயோகிப்பதையும் நோக்கமாக கொள்ளாது ஆனால் அரசாங்கத்தின் மீது பல்வேறு விதங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதன் மூலம் தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் செயற்படும் மனிதக் குழுக்களும் ஒழுங்கமைப்புக்களுமே அமுக்கக் குழுக்கள் என அழைக்கப்படுகின்றன. அரசாங்கத்தின் மீது பல்வேறு வழிமுறைகளிலும் செல்வாக்குச் செலுத்துவதனால் இதனை செல்வாக்கு குழுக்கள் என்றும் அழைப்பர். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் மற்றும் அதனைப் பிரயோகிக்கும் நோக்கம் இல்லாது இருப்பதனாலேயே அமுக்க குழுக்கள் அரசியல் கட்சியிலிருந்து வேறுபடுகின்றன.

நவீன அரசியல் முறைமைகளில் செயற்படும் அமுக்க குழுக்கள் தேசிய ரீதியானவை சர்வதேச ரீதியானவை என இரு வகைப்படும். தொழிற்சங்கங்கள், தொழில் வழங்குனர் அமைப்புக்கள், தொழில் ஒழுங்கமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள், பிரதேச ரீதியான அமைப்புக்கள், நுகர்வோர் அமைப்புக்கள் ஊடாக அமைப்புக்கள் என்ற வகையில் தேசிய மட்டத்திலான அமுக்கக் குழுக்களை இனங்காணலாம். இந்த வகையில் இலங்கையில் குறிப்பிடத்தக்க செல்வாக்கு மிக்க அமுக்க குழுக்கலாக தாதிமார் சங்கம், வைத்தியச்சங்கம், பல்கலைக்கழக மாணவ அமைப்புக்கள், தோட்டத் தொழிலாளர் சங்கம், தனியார் போக்குவரத்துச் சங்கம் என்பவற்றை சுட்டிக்காட்டலாம்.

சர்வதேச மட்டத்தில் மனித உரிமைகள் அமைப்புக்கள், சமாதானம் தொடர்பான அமைப்புக்கள், ஊடக உரிமை தொடர்பான அமைப்புக்கள், போர் ரீதியான அமைப்புக்கள், பல்தேசிய கம்பனிகள் போன்றன சர்வதேச ரீதியாக செயற்படும் அமுக்க குழுக்களுக்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

நவீன ஜனநாயக அரசியல் முறைமைகளில் நல்லாட்சியினை கொண்டு நடத்துவதற்கு அமுக்க குழுக்களின் வகிபங்கு அத்தியாவசியமானதாக கருதப்படுகின்றது. மேலும் அரசாங்க கொள்கைகளை வகுப்பதில் அமுக்க குழுக்களின் பங்களிப்பு பிரதான இடத்தினை வகிக்கின்றன. அரசாங்கத்தின் மீது செல்வாக்கு செலுத்துவதற்காக அமுக்க குழுக்கள் பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இந்த வகையில் வேலை நிறுத்தங்களை மேற்கொள்ளுதல், ஊர்வலங்களை ஏற்பாடு செய்தல், எதிர்ப்பு இயக்கங்கள், சர்வதேச மட்டத்தில் பொருளாதார தடைகள் விதிப்பதற்கான சூழலை உருவாக்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அமுக்க குழுக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள்

(அ) அரசியல் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கத்தையுடையன. அமுக்க குழுக்களுக்கு அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கம் இல்லை.
அமுக்க குழுக்களின் குறிக்கோள் எதுவோ அதனை அடைந்து கொள்வதற்காக மாத்திரமே செயற்படும். அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கம் அவற்றுக்கு இல்லை.

(ஆ) அரசியல் கட்சிகள் பொதுமக்களின் பொதுநலனை நோக்கமாக கொண்டு செயற்படுகின்றன. அமுக்க குழுக்கள் தங்களது தனிப்பட்ட நோக்கங்களை மையமாகக் கொண்டு செயற்படுகின்றன.
அமுக்க குழுக்களின் பிரதான நோக்கம் அவற்றின் தனிப்பட்ட நலன்களை அடைந்துகொள்வது. கட்சிகளோ பொதுமக்களின் நலன்களோ அடிப்படையாக கொண்டவையல்ல.

(இ) அரசியல் கட்சிகளின் இலக்கு பொதுத்தேர்தலில் வெற்றி பெறுவதாகும். அமுக்க குழுக்களின் இலக்கு தனிப்பட்ட தேவையை நிறைவேற்றிக் கொள்வதாகும்.
அரசியல் கட்சிகள் தமது செயற்பாடுகள் அனைத்தையும் தேர்தலை மையமாக கொண்டு முன்னெடுக்கும். அமுக்க குழுக்களோ தனிப்பட்ட நலனை மையப்படுத்தி செயற்படும்.

(ஈ) அரசியல் கட்சிகள் சதாகாலமும் முழு செயற்பாடு உடையதாக காணப்படும். அமுக்க குழுக்கள் அவசியபடும் போது மட்டும் செயற்பாட்டுத் தன்மை பொருந்தியதாக விளங்கும்.
அரசியல் கட்சிகள் காலநேரம் பாராமல் செயற்படும். ஆனால் அமுக்க குழுக்களோ தேவையான போது மட்டுமே செயற்பாடு உடையதாக மாறும்.

## சிவில் சமூகம்

தற்கால அரசுகளில் முக்கிய அம்சங்களில் ஒன்றாக சிவில் சமூகம் என்ற சிந்தனை விளங்குகின்றது. சிவில் சமூகம் என்பது அரசாங்கம், குடும்பம், சந்தைத்தாபனங்கள் ஆகிய மூன்றையும் தவிர்ந்த சமூகத்தில் செயற்படும் சகல சமூகத்தாபனங்களின் கூட்டு மொத்தமே சிவில் சமூகம் எனப்படுகின்றது. லண்டன் பொருளியல் கல்லூரி (London School of Economics) சிவில் சமூகம் என்பது "பங்கீடு செய்து கொண்ட நலன்கள், நோக்கங்கள், மற்றும் விழுமியங்கள் என்பவற்றின் மீது அதிகாரத்தைப் பிரயோகிக்காது ஒத்துழைப்புடன் செயற்படும் சமூகத்துறையே சிவில் சமூகம்" என கோட்பாட்டு ரீதியாக வரைவிலக்கணப்படுத்துகின்றது. இந்தவகையில் நன்கொடை நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், ஜன சமூக அமைப்புகள், சமய அமைப்புக்கள், பரஸ்பர துணை நல்கும் அமைப்புக்கள், சமூக இயக்கங்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், ஆலோசனைக் குழுக்கள், போன்ற சகல சிவில் அமைப்புக்களும் உள்ளடங்கிடும்.

சிவில் சமூகத்தோடு தொடர்பான பிரதான நான்கு பண்புகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. கூட்டுச் செயற்பாடுகள்:-
   சிவில் சமூகத்தின் செயற்பாடு கூட்டு நோக்கத்தற்காக அன்றி தனிப்பட்ட நோக்கங்களுக்காகவோ நலன்களுக்காகவோ இடம்பெறமாட்டாது.

2. அதிகார பிரயோகம் இன்மை:-
   சிவில் சமூகம் அதிகாரத்தின் அடிப்படையில் அன்றி தன்னார்வ விருப்பு மற்றும் தேவையின் அடிப்படையிலேயே செயற்படுகிறது. மனிதர்கள் தமது சுய விருப்பின் அடிப்படையிலேயே சிவில் சமூகத்தோடு தொடர்புபடுகின்றனர். அதேபோன்று தமது சுய விருப்பின் பெயரில் அதிலிருந்து விலகவும் முடியும்.

3. அடையாளம்:-
   கோட்பாட்டு ரீதியாக சிவில் சமூகம் தனக்கே உரிய அடையாளத்தைக் கொண்டுள்ளது. அது அரசு, குடும்பம், சந்தை நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து வேறுபட்டதாகும்.

4. ஆள்புலத்தை நிச்சயமாக அடையாளம் காண முடியாமை:-
   மேலே குறிப்பிட்ட அரசு, குடும்பம், சந்தை நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து சிவில் சமூகத்தை எந்த ஆள்புல எல்லைகளின் அடிப்படையில் வேறுபடுத்தலாம் என்று நிச்சயமாக அடையாளம் காண முடியாது.

சிவில் சமூகம் முரண்பட்ட ஒரு சக்தியாக செயற்படுவதன் மூலம் அரசியல் அதிகாரம் அதிகாரத்திலுள்ள சில்லோராட்சி விருப்பின் தனியுரிமையாக மாறுவதனைத் தடுப்பதற்கு சிவில் சமூகம் ஒரு பலமான முரண்பாட்டுச் சக்தியாக செயற்பட முடியும் என்று சிவில் சமூகவாதிகள் கூறுகின்றனர். அரசாங்கத்தின் செயற்பாட்டின் மீது கண்விழிப்புடன் (அவதானமாக) இருக்கும் ஒரு காவல் நாயாக செயற்பட்டு நல்லாட்சியை பாதுகாக்கும் சக்தி சிவில் சமூகத்திடம் காணப்படுகின்றது. ஊழல்மிக்க அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அரசாங்கத்தை துஸ்பிரயோகம் செய்வதற்கும், மனித உரிமைகளை மீறுவதற்கும், அடக்குமுறை சட்டங்களை பிறப்பிப்பதற்கும் எதிராக கிளர்ந்து எழுவதன் மூலம் ஒரு காவல் நாய்க்குரிய பணியை சிவில் சமூகம் ஆற்ற முடியும். மேலும் சமூக சேவைகளையும், சமூகத்தின் பொதுப்பண்டங்களையும் வழங்குமாறு அரசாங்கத்தின் மீது தாக்கம் செலுத்தும் திறன் சிவில் சமூகத்திடம் காணப்படுகின்றது.

## அரசும் அதன் மூலக்கூறுகளும்

அரசு அரசறிவியலின் பிரதான கருப்பொருளாகும். ஒவ்வொருவரும் சமூகத்தில் கூடி வாழும் பேறு ஏற்படும் முரண்பாடுகள், சிக்கல்களை தீர்க்கவும், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவும் ஒழுங்கமைந்த நிறுவனமே அரசாகும். இந்த வகையில் அரசின் மூலக்கூறுகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

வரையறுக்கப்பட்ட நிலம்

அரசு ஒன்று நிலைத்திருப்பதற்கு வரையறுக்கப்பட்ட ஓர் நிலப்பரப்பு அவசியமாகும். இங்கு அரசின் எல்லை என்பது நிலப்பரப்பினை மட்டும் குறிப்பதில்லை. அதிலுள்ள நிலம், ஆறுகள், கடல், பிற நீர் நிலைகள், காடுகள், எல்லாமே அதனுள் அடங்கும் ஒரு திட்டவட்டமான நிலப்பிரதேசத்தை குறிக்கும். அப்பிரதேசத்தினுள் ஒரு அரசு மட்டுமே இருக்க முடியும்.

மக்கள் - தேசிய அடிப்படை

அரசு என்பது மக்கள் கூடி வாழும் ஓர் அமைப்பாகும். மக்கள் இன்றி அரசு தோற்றம் பெற முடியாது. மக்களே கூட்டுறவின் வழி. அரசு இனங்காணப்படத் தொடங்கிய காலத்தில் இருந்தே மக்கள் காணப்பட்டனர். எனவே அரசு எனும் போது அவ்வரசில் வாழும் மக்கள் அதாவது பிரஜைகள் காணப்பட வேண்டும். இதுவும் அரசின் அடிப்படை பண்புகளில் ஒன்றாகும்.

அரசாங்கம்

அரசு ஒன்றின் ஆத்மா அரசாங்கமாகும். அரசாங்கம் ஒன்றின் செயற்பாடு சமுதாயத்தின் விருப்பத்தினால் தீர்மானிக்கப்படும். மக்களை பாதுகாக்கவும், மக்களின் விருப்பத்தினை நிறைவேற்றும் ஒரு கருவியாகவும் செயற்படுகின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல், அபிவிருத்தி பணிகளில் ஈடுபடுதல் போன்ற பல கடமைகளை மேற்கொள்கின்றது. அரசாங்கத்தின் வடிவம் எவ்வகையிலும் அமையலாம்.

மன்னராட்சியாக, சிறு குழுவாட்சியாக, சர்வதிகாரமானதாக ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற முறையாக, ஜனநாயக அல்லது சோசலிச முறையாக அமையலாம். அரசின் பிரதியாக அரசாங்கம் செயற்படும்.

இறைமை

இறைமை அரசின் முதன்மை மூலக்கூறாகும். இறைமை என்பதன் பொருள் மேலான அதிகாரம் என்பதாகும். ஏனைய நிறுவனங்களில் இருந்து அரசை வேறுபடுத்திக்காட்டும் பிரதான மூலக்கூறாகும். சட்டதிட்டங்களை இயற்றவும் மக்களை கட்டுப்படுத்தவும் அரசுக்கு இறைமை அதிகாரம் இன்றியமையாததாகும்.

அரசின் பணிகள்

- ✓ பாதுகாப்பையும் சமாதானத்தையும் நிலைநிறுத்துதல்.
- ✓ சொத்துக்கள் உள்ளிட்ட ஏனைய உரிமைகளைப் பாதுகாத்தல்.
- ✓ சமூகத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை பேணுதல்.
- ✓ பொருளாதார செயற்றினையும் விருத்தியையும் மேம்படுத்தல்.
- ✓ சமூக நீதியை உருவாக்குதல்.
- ✓ சமூக நலன்புரி பணிகளை மேற்கொள்ளுதல்.
- ✓ சர்வதேச உறவை பேணுதல்.

## ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு

அரசியல் அமைப்புக்களை வகைப்படுத்தும் போது அரச அதிகாரத்தைப் பங்கிடும் முறையினை அடிப்படையாகக் கொண்டு ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு, சமஷ்டியாட்சி அரசியல் அமைப்பு என வகைப்படுத்துகின்றனர். ஒற்றையாட்சி அரசியல் அமைப்பில் அரசின் இறைமையானது முழுமையாக மத்திய அரசிடமே குவிந்திருக்குமாயின் அதனை ஒற்றையாட்சி முறை என அழைப்பர். மத்திய அரசு உயர் தன்மை பொருந்தியதாகக் காணப்படும் அரசின் சட்டவாக்கம் நிர்வாகம், நீதி பரிப்பாலனம் ஆகிய முத்துறை அதிகாரங்களும் மத்திய அரசினால் செயற்படுத்தப்படும். மத்திய அரசின் அதிகாரமே மேலோங்கி இருக்கும். ஒற்றையாட்சி அரசுக்கு உதாரணமாக இலங்கை, பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளைக் குறிப்பிடலாம்.

ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் பண்புகள்

- ✓ அரசின் இறைமை அதிகாரம் முழுமையாக மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.
- ✓ சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை அதிகாரங்கள் மத்திய அரசிடம் மையப்படுத்தப்பட்டிருக்கும்.
- ✓ மத்திய தேசிய அரசாங்கத்தினால் படிநிலை திட்டத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவன செயற்பாடுகளின் ஊடாக கீழ்நிலை நிறுவனங்களை இல்லாதொழிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு காணப்படும்.
- ✓ மத்திய சட்டத்துறையின் உயரியத் தன்மை வெளிப்படும் வகையில் ஒற்றையாட்சி நாடுகளின் தேசிய சட்டத்துறை ஓரங்கவாத அடிப்படையில் அமைந்திருக்கும்.
- ✓ பிராந்திய அலகுகளை உருவாக்கவும், மாற்றவும், நீக்கவும் மத்திய அரசு அதிகாரம் பெற்றுக் காணப்படும்.

## சமஷ்டி அரசியல் அமைப்பு

சமஷ்டி அரசியல் அமைப்பு என்பது தனி அரசினுள் அரசாங்கங்களுக்கிடையில் இறைமை அதிகாரத்தைப் பங்கிட்டு நடைமுறைப்படுத்தப்படும் ஆட்சி முறையாகும். மத்திய மாநில அரசுகளுக்கிடையே இறைமை அதிகாரம் பங்கு போடப்பட்டிருக்கும். இதன்படி மத்திய அரசுக்கும் அதன் பிராந்திய அலகுகளுக்கும் இடையே சட்டவாக்க, நிர்வாக, நீதித்துறை அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்கும். பிராந்தியங்களின் சுயாதீனத் தன்மை பாதுகாக்கப்பட்டிருப்பதோடு மத்திய அரசு மாநிலங்களை இல்லாதொழிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்காது.

சமஷ்டி அரசியல் அமைப்பின் பண்புகள்

- மத்திய அரசு, மாநில அரசு என இருவகையான அரசாங்கங்கள் காணப்படும்.
- மத்திய மாநில அரசுகளுக்கிடையில் இறைமை அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும். அதன்படி அரசியல் திட்டத்தின் மூலம் இவற்றுக்கிடையே தெளிவாக அதிகார பங்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கும்.
- அரசியல் யாப்பு எழுதப்பட்டதாக இருப்பதுடன் அது நெகிழாத் தன்மை வாய்ந்ததாகவும் காணப்படும்.
- சுதந்திரமாக இயங்கும் நீதித்துறை காணப்படுதல். அதாவது சமஷ்டி நீதிமன்றம் உருவாக்கப்பட்டிருத்தல்.
- மத்திய அரசின் சட்டத்துறை இரு சபைகளை உள்ளடக்கி இருத்தல். அவற்றில் முதலாவது சபை மத்திய அரசையும் மற்றைய சபை மாநிலங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும்.

கல்விக்களஞ்சியம் மாணவர்

## பாராளுமன்ற அரசாங்க முறை

இதனை மந்திரி சபை அரசாங்க முறை, கபினட் அரசாங்க முறை, வெஸ்மினிஸ்டர் அரசாங்க முறை எனவும் அழைப்பர். உண்மையான நிறைவேற்றுப் பகுதியான மந்திரிசபை தனது அரசியல் கொள்கைகள், செயற்பாடுகள் தொடர்பாக உடனடியாகவும், சட்ட ரீதியாகவும், சட்டத்துறைக்கும் இறுதியாக வாக்காளருக்கும் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளதும், நாம நிருவாகம் பொறுப்புக் கூற கடமைப்படாததுமான அரசாங்க முறையே மந்திரிசபை அரசாங்க முறையாகும். இம் முறை பிரித்தானியாவில் தோற்றம் பெற்று இன்று கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற பெரும்பாலான நாடுகளில் நடைமுறையில் உள்ளது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்ற கட்சி அரசாங்கத்தை அமைப்பதால் இதனை பாராளுமன்ற அரசாங்க முறையெனவும் அழைப்பர்.

பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகள்

- ✓ உண்மை நிர்வாகம், நாம நிர்வாகம் என இருவகையான நிர்வாகங்கள் காணப்படுதல்.
- ✓ சட்ட மன்றத்தில் பெரும்பான்மையை பெரும் கட்சி அரசாங்கத்தை அமைத்தல்.
- ✓ சட்டத்துறையில் இருந்து நிர்வாகத்துறை தோற்றம் பெறுதல்.
- ✓ நிர்வாகத்துறை சட்டத்துறைக்குப் பொறுப்புக் கூற கடமைப்பட்டிருத்தல்.
- ✓ அமைச்சரவையில் கூட்டும் பொறுப்பு முக்கிய அம்சமாக காணப்படுதல்.
- ✓ சட்டத்துறையில் இருந்து நிர்வாகத்துறை தெரிவு செய்யப்படுவதால் இரண்டுக்கும் இடையே நெருங்கிய உறவு காணப்படுதல்.
- ✓ ஆளும் கட்சிக்கு சமபலமுள்ள எதிர்க்கட்சி உருவாகி செயற்படுதல்.

## ஜனாதிபதி அரசாங்கமுறை

நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்குப் பொறுப்புக் கூற கடமைப்படாத அரசாங்க முறையே ஜனாதிபதி முறையாகும். நிர்வாகத்துறை சட்டத்துறைக்கு உட்படாத வகையிலும் கட்டுப்படாத வகையிலும் பாராளுமன்றத்திலிருந்து தோற்றம் பெறாமல் தனியாக தெரிவு செய்யப்படும் முறையாகும். நிறைவேற்றுத்துறை ஒரு குறிப்பிட்ட பதவிக் காலத்திற்காக அதற்கென தனியான தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படும். சட்டத்துறையில் இருந்து யாப்பு ரீதியாக சுதந்திரமுடையதும் தனது கொள்கை, செயற்பாடுகள் தொடர்பாக சட்டத்துறைக்கு பொறுப்புக்கூற கடமைப்படாததுமான அரசாங்க முறையே ஜனாதிபதி அரசாங்க முறையாகும். இதற்கு உதாரணமாக அமெரிக்கா, பிரான்ஸ், இலங்கை ஆகிய நாடுகளைக் குறிப்பிடலாம்.

ஜனாதிபதி அரசாங்க முறையின் பண்புகள்

- ✓ நிர்வாகத்துறை சட்டத்துறைக்கு வெளியில் இருந்து தனியான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுதல்.
- ✓ ஜனாதிபதி எனும் தனியொருவரிடம் நிர்வாகத்துறை அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருத்தல்.
- ✓ அதிகார பிரிவினைக் போட்பாடு பின்பற்றப்பட்டிருத்தல், சட்ட, நிர்வாக, நீதித்துறைகள் தனித்தனியே செயற்படுதல்.
- ✓ பெயரளவு நிர்வாகம், உண்மை நிர்வாகம் இரண்டும் இணைந்து ஜனாதிபதியிடம் காணப்படுதல்.
- ✓ சட்டத்துறையின் தலையீடு இன்றி நிர்வாகத்துறை சுதந்திரமாக செயற்படுதல்.
- ✓ ஜனாதிபதி ஆட்சி முறையில் நிறைவேற்றுத்துறை குறிப்பிட்டதொரு பதவிக் காலத்துக்கென தெரிவுசெய்யப்படுதல்.

குறிப்பு:

இங்கு தரப்பட்டிருப்பவை வினாவொன்றுக்கான முழுமையான விடைகளோ அல்லது விளக்கங்களோ இல்லை என்பதனை மாணவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இங்கு தரம் 12

பாடத்திட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட சில பகுதிகளுக்கான சிறுகுறிப்பு மட்டுமே வழங்கப்பட்டள்ளது. எனவே இவை தொடர்பாக மேலதிகமாக தேடி ஆயத்தப்படுத்துவது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

- கடந்த கால அரசியல் விஞ்ஞான வினாவிடை புத்தகம் மற்றும் புள்ளி வடிவங்கள் திட்டம், (பரீட்சை திணைக்களம்)
- ஆசிரியர் அறிவுரைப்படி வழிகாட்டி, தரம் - 12 - தேசிய கல்வி நிறுவகம்.
- அரசறிவியல் ஓர் அறிமுகம் - பாகம் I, II - A.C.M. பலீல்
- அரசியல் விஞ்ஞானம் - தரம் - 12 - கந்தையா சங்கரலிங்கம்
- அரசறிவியல் - வேலுப்பிள்ளை குணரத்தினம்.
- அரசறிவியல் ஓர் அறிமுகம் - சி. அ. யோதிலிங்கம்

பயிற்சி வினாக்கள்

1. அரசியல் கட்சிகள் என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதன் பணிகளை விளக்குக.
2. இரு கட்சி முறையின் நிறைகளையும் குறைகளையும் விளக்குக.
3. சிறுகுறிப்பு எழுதுக.
   (i) அமுக்க குழுக்கள்
   (ii) அரசியல் கட்சிகளுக்கும் அமுக்க குழுக்களுக்கும் இடையிலான வேறுபாடு.
   (iii) சிவில் சமூகம்.
4. அரசு
5. அரசின் பணிகள் எவை.
6. ஒற்றையாட்சி அரசின் பண்புகளை சமஷ்டியாட்சி அரசின் பண்புகளுடன் ஒப்பிடுக.
7. சமஷ்டியாட்சி முறையின் நிறைகளும் குறைகளும்.
8. பாராளுமன்ற ஆட்சி முறையை ஜனாதிபதி ஆட்சி முறையுடன் ஒப்பிடுக.
9. ஜனாதிபதி ஆட்சி முறையின் நிறைகளும் குறைகளும்
10. சிறு குறிப்பு எழுதுக.
    (i) நல்லாட்சி
    (ii) உலக மயமாக்கலும் அரசம்
    (iii) நவீன தேசிய அரசு

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## பகுதி - **A**

1. அரசியல் கட்சிகளின் பணிகள் இரண்டு தருக.
   (i)..........................................................................................................................
   (ii).........................................................................................................................

2. ஒரு கட்சி முறைமையின் குறைப்பாடுகள் இரண்டு தருக.
   (i)..........................................................................................................................
   (ii).........................................................................................................................

3. சுதந்திரத்திற்கு முன்னர் இலங்கையில் உருவாக்கப்பட்ட இடதுசாரி கட்சிகள் இரண்டினை பெயரிடுக.
   (i)..........................................................................................................................
   (ii).........................................................................................................................

4. அமுக்க குழுக்களுக்கு அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டைத் தருக.
   (i)..........................................................................................................................
   (ii).........................................................................................................................

5. சிவில் சமூகத்தின் பண்புகள் இரண்டு தருக.
   (i)..........................................................................................................................
   (ii).........................................................................................................................

6. கிரேக்க நகர அரசுகளின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (i)..........................................................................................................................
   (ii).........................................................................................................................

7. அரசின் பணிகள் இரண்டு தருக.
   (i)..........................................................................................................................
   (ii).........................................................................................................................

8. ஒற்றையாட்சி அரசாங்கத்தின் பண்புகள் இரண்டினைத் தருக.
   (i)..........................................................................................................................
   (ii).........................................................................................................................

9. சமஷ்டியாட்சி முறை உருவாக செல்வாக்கு செலுத்தும் காரணிகள் இரண்டு தருக.
   (i)..........................................................................................................................
   (ii).........................................................................................................................

10. ஜனாதிபதி அரசாங்க முறைமையின் குறைப்பாடுகள் இரண்டு தருக.
    (i)..........................................................................................................................
    (ii).........................................................................................................................

## குடியரசுவாதம்

குடியரசுவாதம் 17, 18ஆம் நூற்றாண்டுகளில் முடியாட்சிக்கு எதிராகவும், தாராண்மைவாதத்திற்கு சமாந்திரமாகவும் எழுச்சிப் பெற்ற கருத்தியலாகும். இதன் பொருள் "மக்கள் அதிகார ஆட்சி" என்பதாகும். அரசியல் பிரஜைகள், பிரஜா உரிமை, சுதந்திரம் மற்றும் அரசியல் தொடர்பான குடியரசுவாத கருத்துக்கள் நவீன அரசுகள் தோற்றம் பெருவதிலும் அதன் இயல்பு, நோக்கங்கள், கட்டமைப்புக்கள் தீர்மானிக்கப்படுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. குடியரசுவாத கருத்தியலின் வளர்ச்சிக்கட்டத்தை பின்வருமாறு குறிப்பிடலாம்.

(i) பலம் குடியரசுவாதம்

இதனை கிரேக்க மற்றும் உரோம கால குடியரசு யுகம் எனவும் அழைப்பர். கிரேக்க காலத்தில் மக்களது அரசியல் பங்குபற்றுதல் நேரடி ஜனநாயக வழிமுறைகளின் ஊடாக குடியரசுவாதம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

(ii) ஐரோப்பிய மறுமலர்ச்சி குடியரசுவாதம்

மத்திய கால ஐரோப்பாவில் குடியரசுவாதம் மீள் எழுச்சிப் பெற்றது. ஆட்சி செயற்பாடுகள் மதத்தின் பெயரால் இடம்பெற்றமையால் மக்களது அரசியல் பங்குபற்றுதல் சுதந்திரம் மற்றும் உரிமைகளும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் குடியரசுவாத சிந்தனை வீழ்ச்சியடைந்திருந்தது. ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, அறிவியல் மற்றும் மறுமலர்ச்சி சிந்தனைகள் குடியரசுவாத கருதியல் மீண்டும் மறுமலர்ச்சிபெற வழி வகுத்தது.

(iii) 18ஆம் நுற்றாண்டின் (பிரான்ஸ், அமெரிக்கா) குடியரசுவாதம்

இக்காலகட்டத்தில் பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவை மையப்படுத்தி குடியரசுவாதம் வளர்ச்சியடைந்தது. அமெரிக்க சுதந்திர புரட்சி மற்றும் பிரான்சியப் புரட்சி என்பன சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன வளர்ச்சியடைய வழிவகுத்தது.

(iv) 20ஆம் நூற்றாண்டின் (நவீன) குடியரசுவாதம்

தேசிய அரசுகள், நவீன அரசுகள் தோற்றம் பெற்றதை அடுத்து அந்நாடுகளின் ஆட்சி முறைகள் கொள்கைகளில் பிரதானமாக குடியரசுவாத சிந்தனைகள் முக்கியத்துவம் பெறலாயிற்று.

குடியரசுவாத பண்புகள்

- அரசாட்சி முறைக்கு நேர்எதிரானது
- இறைமையின் உரிமையாளன் பொதுமக்களாவர், ஆட்சியாளர் அல்லன்.
- ஆட்சியாளர் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.
- பொது நன்மைக்காக அர்ப்பணிப்புடன் உழைப்பதே பிரஜைகளின் பிரதான பண்பாகும் இதனை "சிவில் நல்லொழுக்கம்" என்பர்.
- அனைத்துப் பிரஜைகளினதும் பொது நன்மைக்காக அரசியல் சமூகம் ஒழுங்கமைந்திருத்தல் வேண்டும்.
- பிரஜைகளின் அரசியல் பங்குபற்றுதல் பிரதானமான செயலாகும். மக்கள் அரசியலில் சுதந்திரமாக பங்குபற்றுதல் அவசியம்.

## தாராண்மைவாத கோட்பாடு

தாராண்மைவாதம் என்பதனை ஆங்கிலத்தில் லிபரலிசம் எனவும் அழைப்பர். அரசியல், பொருளாதார, சமூக மற்றும் தனி மனித சுதந்திரத்தை மனிதனுக்கு உச்சளவில் வழங்க வேண்டும் என்பதே தாராண்மைவாத கருத்தியலின் மையக்கருத்தாகும்.

### அரசின் தோற்றம் பற்றிய தாராண்மைவாத கருத்து

தாராண்மைவாத கோட்பாட்டின்படி அரசு என்பது பொது நன்மைக்காக மனிதனால் தாபிக்கப்பட்ட நிறுவனமாகும். மனித வாழ்க்கையில் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும், அவர்களின் பொது விருத்திக்காகவும் மக்களே அரசை தாபித்துள்ளனர். இக்கோட்பாட்டின் படி அரசு தோன்றுவதும் இருப்பதும் மனிதனின் விருப்பத்தின் அடிப்படையிலாகும்.

அரசு கடவுளாளோ அல்லது பலவந்தமாகவோ உருவாக்கப்படவில்லை. அரசு சமூக படிமுறை வளர்ச்சியின் விளைவாக தோன்றியதாகும் என சமூக படிமுறை வளர்ச்சி கோட்பாட்டை ஏற்றுக் கொள்கின்றனர். சிதறிக் கிடந்த மனிதன் சில சமூக பண்புகளால் ஒரு பொது இடத்தில் நிலையாக குடியமர்ந்து சமூகமாக ஒழுங்கமைந்தமையே அரசின் தோற்றத்தின் ஆரம்பமாகும். சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் குறிப்பாக சட்டமும் ஒழுங்கும் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளும் பொதுத்தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய தேவையுமே அரசு உருவாக வழிவகுத்தது. சமூக மக்களே அரசை உருவாக்கிக் கொண்டனர் என தாராண்மைவாதிகள் குறிப்பிடுகின்றனர்.

### தாராண்மைவாத அரசின் வளர்ச்சி

தாராண்மைவாதிகள் அரசின் வளர்ச்சியானது படிமுறையாக ஏற்பட்டது என்கின்றனர். அரசின் முதல் கட்டமான குடும்பம் வளர்ச்சியடைந்து குலமரபுக் குழுக்களாகவும் பின்னர் சமூகமாகவும் வளர்ச்சியடைந்த போது பல்வேறு தேவைகளின் காரணமாக அரசு உருவாகியது.

### தாராண்மை வாத அரசின் எதிர்காலம்

மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசை உருவாக்கி கொண்டனர். எனவே மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசு தொடர்ந்தும் நிலைத்திருக்கும் தாராண்மைவாத சிந்தனையின்படி அரசு சிற்சில மாற்றங்களுக்கு உட்பட்டாலும் அது நிரந்தரமாக நிலைத்திருக்கும் ஒரு நிறுவனமாகும்.

### தாராண்மைவாத அரசின் பண்புகள்

- அரசு மக்களால் உருவாக்கப்பட்ட நிறுவனமாகும். அரசாங்கத்தை அமைக்கவும் மாற்றவும் மக்கள் உரிமை பெற்றிருப்பர்.
- பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கும் பொது நலன்பேண் நிறுவனமாகும்.
- மக்களின் அடிப்படை உரிமைகளையும் பேணிப் பாதுகாப்பதோடு அதனை பெற்றுக்கொடுப்பதற்காக செயற்படும் நிறுவனமாகும்.
- சட்டவாட்சியை நிலைநிறுத்துவதோடு யாப்புரு அரசாங்கம் செயற்படுத்தப்படும்.
- சுதந்திரமான நீதித்துறை காணப்படுவதோடு, நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்கள் நடைபெறும்.
- மக்களுக்காகவே அரசு என்ற வகையில் அரசாங்கம் செயற்படும்.

## சோசலிச கோட்பாடு

இதனை மாக்சிசக் கோட்பாடு பொதுவுடைமைக் கோட்பாடு எனவும் அழைப்பர். கால்மாக்சின் கருத்துக்கள், லெனின், ஸ்டேலின், மாவோ சே தூங் போன்றவர்களால் அபிவிருத்தி செய்யப்பட்டு சோசலிச கோட்பாடு வளர்ச்சியடைந்தது.

அரசின் தோற்றம் பற்றிய சோசலிச கருத்து

மாக்சிய வாதத்தின்படி அரசு ஒரு வர்க்க கருவியாகும். அதன் மூலம் முதலாளித்துவ வர்க்கமானது தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டி தமது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் சமூக சலுகைகளை பாதுகாத்துக் கொள்வதற்குமான வழியை திறந்து கொள்கின்றனர். அரசு என்பது வர்க்க முரண்பாட்டின் விளைவேயன்றி வேறொன்றுமில்லை. அது மனித சமூக செயற்பாட்டின் இயல்பான பெறுபேறன்று சமூக முன்னேற்றச் செயன்முறையின் ஒரு கட்டத்தில் தோன்றிய தனியார் சொத்தடைமையின் காரணமாக சமூகம் சொத்துடையோர் வர்க்கம், சொத்தற்ற வர்க்கம் என இரு வர்க்கங்களாக பிளவுபட்டமையால் அவ்விரு வர்க்கங்களுக்கும் இடையில் உருவாகிய வர்க்க போராட்டத்தின் விளைவாக அரசு தோன்றியது என கால்மார்க்ஸ் குறிப்பிடுகின்றார்.

சோசலிச அரசின் வளர்ச்சி

மார்க்சியவாத கருத்தின்படி அரசு நீண்ட படிமுறை வளர்ச்சியின் விளைவானதாகும். சமூக வளர்ச்சியின் ஆரம்ப கட்டமான ஆதிகால கம்யூனிச சமூகத்தில் சொத்துடைமையின் அடைப்படையில் வர்க்கங்கள் உருவாகி இருக்கவில்லை. எனவே அங்கு அரசுக்கான அவசியம் இருக்கவில்லை. ஆனால் அடிமைமுறை கருத்தில் எஜமான், அடிமை என இரண்டு வர்க்கங்கள் உருவான போது சொத்துள்ள வர்க்கமாக எஜமான் வர்க்கம், சொத்தற்ற அடிமை வர்க்கத்தை அடக்கி ஆள்வதற்காகவும் தமது வர்க்க நலன்களை பாதுகாப்பதற்காகவும் அரசை உருவாக்கிக் கொண்டனர். பின்னர் நிலமானிய சமூகத்தில் பிரபுக்கள் - குடிகள் எனவும், முதலாளித்துவ சமூகத்தில் முதலாளிகள் - தொழிலாளிகள் எனவும் வர்க்கங்கள் தோன்றியதோடு அவ்வர்க்கங்கள் தமது வர்க்க நலன்களை பாதுகாப்பதற்காக தொடர்ந்தும் செயற்பட்டது. வர்க்க போராட்டத்தின் விளைவாக முதலாளித்துவ அரசு வீழ்த்தப்பட்டு சோசலிச அரசு நிர்மானிக்கப்படும். அவ்வரசு வர்க்கமுறைமையை இல்லாதொழிக்கும் தனது வரலாற்றுப்பணியை முடிக்கும்வரை நடைமுறையில் இருக்கும்.

சோசலிச அரசின் எதிர்காலம்

மாக்சிய வாதத்தின்படி அரசு நிரந்தரமானதன்று. அது சமூகத்தில் தனியார் சொத்துடைமை உருவாகி சமூகமானது உள்ளோர் இல்லாதோர் என இரு வர்க்கங்களாக பிளவடைந்ததன் பின்னரே தோன்றியது. அது தொடர்ந்தும் நிலவி வருகின்றது. தனியார் சொத்துடமை இல்லாதொழிக்கப்பட்டு வர்க்கங்களற்ற ஒரு சமூகம் உருவாக்கப்பட்டால், அரசு இருப்பதற்கான அவசியம் இருக்காது. பொது நன்மைக்காக அது நிறைவேற்றப்பட வேண்டும். இதனை நிறைவேற்றும் பொறுப்பு தொழிலாளர் வர்க்கத்துக்குறியதாகும். புரட்சியின் மூலம் சோசலிச அரசை தாபித்து அதன் பின்னர் கம்யூனிச அரசை உருவாக்குவதற்கு தேவையான அரசியல், பொருளாதார சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். கம்யூனிச சமூகம் சொத்தற்ற வர்க்க முரண்பாடுகளற்ற சமூகமாகும். அங்கு அடக்குமுறை கருவியான அரசின் தேவையும் ஏற்படாது. எனவே அரசு இறுதியில் பட்டொழிந்துவிடும் என மாக்சியவாதிகள் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பு:

இங்கு தரப்பட்டிருப்பவை வினாவொன்றுக்கான முழுமையான விடைகளோ அல்லது விளக்கங்களோ இல்லை என்பதனை மாணவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இங்கு தரம் 12

பாடத்திட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட சில பகுதிகளுக்கான சிறுகுறிப்பு மட்டுமே வழங்கப்பட்டள்ளது. எனவே இவை தொடர்பாக மேலதிகமாக தேடி ஆயத்தப்படுத்துவது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

- கடந்த கால அரசியல் விஞ்ஞான வினாவிடை புத்தகம் மற்றும் புள்ளி வடிவங்கள் திட்டம், (பரீட்சை திணைக்களம்)
- ஆசிரியர் அறிவுரைப்படி வழிகாட்டி, தரம் - 12 - தேசிய கல்வி நிறுவகம்.
- அரசறிவியல் ஓர் அறிமுகம் - பாகம் I, II - A.C.M. பலீல்
- அரசியல் விஞ்ஞானம் - தரம் - 12 - கந்தையா சங்கரலிங்கம்
- அரசறிவியல் - வேலுப்பிள்ளை குணரத்தினம்.
- அரசறிவியல் ஓர் அறிமுகம் - சி. அ. யோதிலிங்கம்

மாதிரி வினாக்கள்

1.
2. சிறுகுறிப்புகள் எழுதுக
   (i) தேசியவாதம்
   (ii) மதசார்பின்மைவாதம்
3. அரசு பற்றிய தாராளவாத கோட்பாடு
4. தாராண்மைவாத மற்றும் மார்க்சிய கோட்பாடுகளை பின்வரும் தலைப்புகளில் விளக்குக.
   (அ) அரசின் தோற்றம்
   (ஆ) அரசின் வளர்ச்சி
   (இ) அரசின் எதிர்காலம்
5. ஜனநாயக மற்றும் அனைத்தான்மை அரசாங்க முறைகளுக்கு இடையிலான வேறுபாடுகள்.
6. ஒரு தாராள ஜனநாயக அரசியல் தனியாளின் நிலை.

மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

## பகுதி - A

1. குடியரசுவாதத்தின் இரண்டு பிரதான அனுமானங்களைப் பெயரிடுக.
   (i)..........................................................................................................
   (ii).........................................................................................................

2. அரசின் பரிணாம வளர்ச்சி தொடர்பாக மார்க்சியவாதக் கோட்பாட்டில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் இரண்டுக் கட்டங்களைக் குறிப்பிடுக.
   (i)..........................................................................................................
   (ii).........................................................................................................

3. பாசிச கருத்தியலை முன்னின்று ஆதரித்த இரு ஐரோப்பிய அரச தலைவர்களை குறிப்பிடுக.
   (i)..........................................................................................................
   (ii).........................................................................................................

4. பின்வரும் கூற்றுக்கள் அரசு பற்றிய இரண்டு கோட்பாடுகளை குறிப்பிடுகின்றன. அவை எவை?
   (i) அரசு ஒரு படிமுறை செயன்முறையினூடாக எழுச்சி பெற்றது.
   ..........................................................................................................
   (ii) அரசு தனியார் சொத்துடைமையின் தோற்றத்துடன் எழுச்சிப் பெற்றது.
   ..........................................................................................................

5. தாராண்மைவாத அரசின் பண்புகள் இரண்டினை குறிப்பிடுக.
   (i)..........................................................................................................
   (ii).........................................................................................................

6. பாசிச அரசின் பண்புகள் இரண்டினை குறிப்பிடுக.
   (i)..........................................................................................................
   (ii).........................................................................................................

7. பின்வரும் கருத்தை வலியுறுத்தும் கோட்பாடுகளின் பெயர்களைத் தருக.
   (i) அரசு பட்டொழிந்துவிடும்.............................................................................
   (ii) அரசு நிலைத்து நின்று செயற்படும்...................................................................

8. மார்க்சிய சிந்தனையாளர்கள் இருவரின் பெயர்களைத் தருக.
   (i)..........................................................................................................
   (ii).........................................................................................................

9. குடியரசுவாத பண்புகள் இரண்டு தருக.
   (i)..........................................................................................................
   (ii).........................................................................................................

10. தேசியவாத கருத்தியலின் பண்புகள் இரண்டு தருக.
   (i)..........................................................................................................
   (ii).........................................................................................................

பகுதிப் பாடசாலைக் கல்விக் கணக்கெடுப்பகம்

## முரண்பாடும் முரண்பாடு தீர்த்தலும்

முரண்பாடு என்பது சமூகத்தில் பல்வேறு படித்தரங்களிலும் காணக்கூடியது. எதிர்வினைத் தொடர்புகள் மோதலை தோற்றுவிக்கலாம். சாதி, சமயம், மொழி, பிரதேசம் போன்ற வேறுபாடுகளும் அத்தோடு சமூகத்தில் காணப்படும் பல்லினத் தன்மை, சண்டை, கலவரம், புரட்சி, யுத்தம் போன்ற வன்முறைகள் உருவாக காரணமாக விளங்குகின்றன. மோதல் என்பதனை முரண்பாடு, பிணக்கு எனவும் அழைப்பர். இந்த வகையில் மேதாதல் என்பதனை இரண்டு அல்லது பல மனிதர்கள், குழுக்கள் அல்லது அரசுகளுக்கு இடையே இணக்கப்பாடற்ற கலவர நிலை என சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்தலாம். பேராசிரியர் கிரிஸ்தோபர் மிச்சல் ''ஒத்துவராத இலக்குகளை கொண்டிருக்கின்ற அல்லது கொண்டிருப்பதாக நினைக்கின்ற இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தரப்புகளுக்கிடையில் காணப்படும் உறவே முரண்பாடாகும்'' என்கிறார்.

முரண்பாட்டின் இயல்புகள்

- எதிர் தரப்பினர் அல்லது அதற்கு எதிரான இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் காணப்படுதல்.
- அவர்கள் இருதரப்பினரும் ஒருவருக்கு ஒருவர் எதிரான வழிமுறைகளில் ஈடுபடுதல்.
- அவர்களது நடத்தைகள் எதிர்தரப்பினருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக இருத்தல்.
- ஒருவருக்கொருவர் சேதம் விளைவித்தல், அழிவை ஏற்படுத்துகின்ற நோக்கமாக கொண்டு செயற்படுதல்.
- மோதலின் தொழிற்பாட்டை வெளிப்படையாக காணக்கூடியதாக இருப்பதால் அதனை மதிப்பிட முடியுமாக இருத்தல்.

முரண்பாட்டின் சாதக விளைவுகள்

- சமூகம் வளர்ச்சியடையாமல் ஒரே இடத்தில் இருப்பதை தவிர்க்கிறது.
- சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றை தீர்ப்பதற்கான தேவையை வலியுறுத்துகிறது.
- சமூகமும் நபர்களும் மாற்றமடைய பங்களிப்புச் செலுத்துகின்றது.
- சுமூகக் குழுக்களின் ஒற்றுமைத் தன்மையினை வலுப்படுத்துகின்றது.
- மாக்சிய கருத்துப்படி சமூக வரலாற்றின் முன்னோக்கிய பயணத்தின் உந்துசக்தியாக காணப்படுவது வர்க்க முரண்பாடே ஆகும்.

முரண்பாட்டின் பாதக விளைவுகள்

- நாடுகளுக்கிடையிலான யுத்தம் காரணமாக பாரிய அழிவுகள் ஏற்படுதல். உதாரணமாக முதலாம், இரண்டாம் உலக போர்கள் ஏற்படுத்திய அழிவுகளை குறிப்பிடலாம்.
- உள்நாட்டு சிவில் யுத்தம், மக்களையும் அவர்களின் வாழ்வாதாரத்தையும் சொத்துக்களையும் பாதிக்கச் செய்யலாம்.
- உயிர்சேதம், பொருள் சேதம் ஏற்பட வழிவகுக்கின்றது.
- பாரிய பொருளாதார சேதம் மற்றும் நெருக்கடிகளுக்கு காரணமாக அமைதல்.

குறிப்பு:

இங்கு தரப்பட்டிருப்பவை வினாவொன்றுக்கான முழுமையான விடைகளோ அல்லது விளக்கங்களோ இல்லை என்பதனை மாணவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இங்கு தரம் 12 பாடத்திட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட சில பகுதிகளுக்கான சிறுகுறிப்பு மட்டுமே வழங்கப்பட்டள்ளது. எனவே இவை தொடர்பாக மேலதிகமாக தேடி ஆயத்தப்படுத்துவது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

- கடந்த கால அரசியல் விஞ்ஞான வினாவிடை புத்தகம் மற்றும் புள்ளி வழங்கள் திட்டம், (பரீட்சை திணைக்களம்)
- ஆசிரியர் அறிவுரைப்படி வழிகாட்டி, தரம் - 12 - தேசிய கல்வி நிறுவகம்.
- அரசறிவியல் ஓர் அறிமுகம் - பாகம் I, II - A.C.M. பலீல்
- அரசியல் விஞ்ஞானம் - தரம் - 12 - கந்தையா சங்கரலிங்கம்
- அரசறிவியல் - வேலுப்பிள்ளை குணரத்தினம்.
- அரசறிவியல் ஓர் அறிமுகம் - சி. அ. யோதிலிங்கம்

மாதிரி வினாக்கள்

1. மோதல் முரண்பாடு என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, அதன் சாதக, பாதக பண்புகளை பட்டியல் இடுக.
2. மோதலை முகாமைத்துவப்படுத்தும் வழிமுறைகள்
3. மோதல் தடுப்புக்கும் மோதல் முகாமைத்துவத்திற்குமுள்ள வேறுபாடுகள்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## இலங்கையின் காலணித்துவ நிலை மாற்றம்

பிரித்தானிய ஏகாதிபத்திய அரசு இலங்கையின் கரையோர மாகாணங்களை 1796இல் கைப்பற்றியதோடு 1815 கண்டி இராசதானி கைப்பற்றப்பட்டதுடன் இலங்கை முழுவதையும் தனது காலணித்துவ ஆட்சிக்குட்படுத்தியது. அது முதல் 1948இல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் வரையிலான காலப்பகுதியே காலணித்துவ ஆட்சிக் காலப்பகுதியாகும். இந்த வகையில் பிரித்தானிய காலணித்துவ ஆட்சியின் போது இலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, நீதித்துறை மற்றும் சமூக நிலை மாற்றங்களை பற்றிய அறிவே இத்தலைப்பில் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1833 - கோல்புறூக் - கமரன் சிபார்சுகள்

கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சுகள்

(i) தேசாதிபதியின் அதிகாரங்களை குறைத்தல்.
(ii) நிர்வாக விடயங்களில் தேசாதிபதிக்கு உதவி புரிவதற்காக சட்டசபை மற்றும் நிறைவேற்று சபைகளை தாபித்தல்.
(iii) மலைநாட்டையும் கரையோர மாகாணங்களையும் இணைத்து இலங்கையின் நிருவாகத்தை ஐக்கியப்படுத்தி அதன்மூலம் ஒற்றை நிருவாக முறையை ஏற்படுத்தல்.
(iv) இலங்கை 16 மாகாணங்களாக பிரிக்கப்பட்டிருப்பதனை மாற்றி அவற்றை ஐந்து மாகாணங்களாக பிரித்தல் (வட மாகாணம், கீழ் மாகாணம், தென் மாகாணம், மேல் மாகாணம், மத்திய மாகாணம்)
(v) ஆங்கில கல்வியை விஸ்தரித்தல், ஆங்கில கல்வியை பெற்றுக்கொள்வதில் சமூகத்தில் நிலவும் ஆர்வத்தை தக்கவைப்பதனை இலக்காக கொண்டு ஒரு கல்வி நிர்வாகத்துக்கான மத்திய ஆணைக்குழுவை தாபித்தல்.
(vi) சிவில் சேவையில் சேர்வதற்கு இலங்கையருக்கு கதவை திறந்துவிடுதல்.
(vii) இராஜகாரிய முறையினை ஒழித்தல்.
(viii) அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை ஒழித்தல்.
(ix) இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளை கொண்டுவருவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல்.

கமரனின் பிரதான சிபார்சுகள்

(i) இலங்கையில் ஓர் ஐக்கிய நீதிமுறையினை உருவாக்குதல்.
(ii) கண்டி மற்றும் கரையோர மாகாணங்களில் காணப்பட்ட பல்வேறு நீதிமன்றங்களை இல்லாதொழித்தல்.
(iii) நீதியை நிர்வகிப்பதற்காக பிரதம நீதியரசர் மற்றும் ஏனைய இரண்டு நீதிபதிகளை உள்ளடக்கிய ஓர் உயர் நீதிமன்றத்தினை உருவாக்குதல்.
(iv) உயர் நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளையும் கொண்டுவருதல்.
(v) நிறைவேற்றுத்துறையில் இருந்து நீதித்துறையினை வேறுபடுத்துதல், குறிப்பாக நீதிபதியின் தீர்ப்புகளை தேசாதிபதிக்கு அனுப்பி வைப்பதனை நிறுத்துதல்.
(vi) மாவட்ட நீதிமன்றங்களை தாபித்து சம்பந்தப்பட்ட மாவட்டத்துக்கு சிவில் மற்றும் குற்றவியல் தொடர்பான விசாரனைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை ஒப்படைத்தல்.
(vii) ஐரோப்பியருக்கும் சுதேசிகளுக்கும் புறம்பான நீதிமன்றங்கள் நிலவுவதை முடிவுக்கு கொண்டுவருதல், சகலருக்கும் ஒரே நீதிமன்ற முறையை தாபித்தல்.

## கோல்புறூக் - கமரன் யோசனைகள் இலங்கையில் ஏற்படுத்திய தாக்கம்

மத்திய பாகசாலை கல்வித் திணைக்களம்

(i) ஜனநாயக முறையிலமைந்த ஓர் ஆட்சிமுறைமை இலங்கையில் விருத்தியடைய தளமிடப்பட்டமை.
(ii) சந்தை முறைப் பொருளாதாரம் விருத்தியடைவதற்கான தளம் இடப்பட்டது.
(iii) மானிய முறையின் வீழ்ச்சியும் அதன் விளைவாக சாதி முறை தளர்வடைந்தமையும்.
(iv) மனிதனின் தனியாள் தன்மை விருத்தியடைவதற்கும் மனிதர் சமூகமயமாவதற்கும் தளம் இடப்பட்டமை.
(v) ஏற்றுமதி இறக்குமதிக்கான அடித்தளம் இடப்பட்டமை.
(vi) தொழில் முயற்சியாளர் வகுப்பொன்று உருவாவதில் பாதிப்பு செலுத்தியது.
(vii) சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு நீதி முறைமை விருத்தியடைவதற்கான ஆரம்பத்தளம் இடப்பட்டது.
(viii) ஒற்றை நிருவாக முறைமையை ஏற்படுத்தலும் அதன் விளைவாக பிரதேச பிரபுத்துவ தலைவர்கள் அனுபவித்த சமூக அதிகாரம் இல்லாதொழிந்தமை.
(ix) பாராளுமன்ற முறையிலமைந்த அரசியல் முறைமையின் விருத்திக்கான ஆரம்ப அடித்தளம் இடப்பட்டமை.

கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தின் தாக்கம் எவ்வாறானது என ஆராயும் போது, இலங்கை சமூகத்தை சர்வதிகார, தன்னிச்சையான ஆட்சி முறைமையிலிருந்து ஜனநாயக ஆட்சி முறைக்கும் மானிய பொருளாதார முறைமையிலிருந்து முதலாளித்துவப் பொருளாதார முறைமைக்கும் பின்தங்கிய சமூக முறைமைக்கும் மாற்றமுறுவதற்கான தளம் கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்கள் மூலம் இடப்பட்டது.

பிரித்தானிய காலணித்துவ ஆட்சியில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, நீதித்துறை விளைவுகள் அல்லது மாற்றங்கள்.

அரசியல் மாற்றங்கள்

பிரித்தானிய ஆட்சியில் இலங்கையில் அரசியல் ரீதியாக பல அடிப்படை மாற்றங்கள் உருவானது. பாரம்பரிய மரபு ரீதியான ஆட்சிமுறை வீழ்ச்சியடைந்து ஒரு கட்டமைப்புக்குள் புதிய அரசியல் முறையொன்று கட்டியெழுப்பப்பட்டது. அவை பின்வருமாறு.

- இலங்கையில் பாரம்பரியமாக நிலவிவந்த மரபு ரீதியான மானிய முறை முடியாட்சி வீழ்ச்சியடைந்தது.
- இலங்கையில் பிரித்தானிய முடிக்குரிய குடியாட்சி நிருவப்பட்டது.
- இலங்கையில் அரசியல் அதிகாரமும் அரசியல் நிர்வாகமும் அரசியல் திட்டத்துக்கு உட்பட்டது.
- மேலைத்தேச ஜனநாயக அரசியல் நிறுவனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை.
  Eg: சட்ட சபை
- சட்டத்தின் ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட நிர்வாகமுறை வளர்ச்சியடைந்தமை.
- பிரித்தானிய சிவில் சேவை நிர்வாக முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
- ஜனநாயக ஆட்சி முறைக்கு இலங்கை படிப்படியாக பழக்கப்பட்டது.
- இலங்கை முழுவதற்கும் ஒரேமாதிரியாக அமைந்த அரசியல் முறை உருவாகியது.

பொருளாதார மாற்றங்கள்

இலங்கையை பிரித்தானியா கைப்பற்ற முன்னர் சுயதேவையை அடிப்படையாகக் கொண்ட நிலமானிய விவசாய, பொருளாதார முறையே காணப்பட்டது. பிரதானமாக நெல் உற்பத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு சுய தேவை பூர்த்தியடையக் கூடியதாக விளங்கியது. ஆனால்

மக்கள் பாடசாலைக் கல்விக்கான களம்

பிரித்தானிய காலணித்துவ ஆட்சியில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதோடு இலங்கையின் பொருளாதார துறை பின்வரும் மாற்றங்களைக் கண்டது.

- சுதேச பொருளாதாரம் குறிப்பாக நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.
- பெருந்தோட்டத்துறை அரச ஆதரவுடன் வளர்ச்சியடைந்தது.
- உள்ளூர் கைத்தொழில்கள் வீழ்ச்சியடைந்தன.
- ஏற்றுமதி, இறக்குமதி, பொருளாதார முறை வளர்ச்சியடைந்தது.
- வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டு பெருந்தெருக்கள், புகையிரதப்பாதைகள் போன்ற கட்டமைப்புகள் வளர்ச்சியடைந்தது.
- வர்த்தகத்தில் அரசாங்கத்தின் ஏகபோக உரிமை நீக்கப்பட்டு சுதந்திரமான சந்தை முறை உருவானது.
- பணம் புலக்கத்துக்கு வந்ததோடு வங்கிகளும், வங்கி முறைகளும் அறிமுகமாகியது.
- இராஜகாரிய முறை நீக்கப்பட்டதோடு, இந்திய தோட்டத் தொழிலாளர் பிரச்சினையும் ஆரம்பமானது.

நீதித்துறை மாற்றங்கள்

இலங்கையில் நீதிப்பரிபாலன முறையில் புதிய அமைப்பை உருவாக்கியது கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்களின் கீழ் சார்ள்ஸ் கமரனின் சீர்திருத்த யோசனைகளே. இலங்கை நீதித்துறையில் அடிப்படை மாற்றங்கள் உருவாக வழிவகுத்தன. இதன் காரணமாக இலங்கையில் காணப்பட்ட பாரம்பரிய மரபு ரீதியான நீதி நிர்வாக முறை மாற்றமடைந்து மேலைத்தேய நீதிமன்ற முறை இலங்கையில் அபிவிருத்திக்கண்டது. இதன் அடிப்படையில் அந்நீதித்துறை மாற்றங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- இலங்கையில் சுதந்திரமான நீதித்துறையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன்படி உயர் நீதிமன்ற நீதிபதிகள் பிரித்தானிய அரசால் நியமிக்கப்பட்டனர்.
- உயர்நீதிமன்றத்தின் தலைமையில் செயற்படும் ஒரு ஐக்கிய நீதித்துறை உருவானது.
- மாவட்ட நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு கீழ்மட்ட நீதிமன்றங்களுக்கு மேலாக செயற்படக்கூடிய நீதித்துறை அமைக்கப்பட்டது.
- ஐரோப்பியருக்கும், சுதேச மக்களுக்கும் தனித்தனியாக செயற்பட்ட நீதிமன்றங்கள் நீக்கப்பட்டு அனைவருக்கும் பொதுவான நீதிமன்ற முறை ஏற்படுத்தப்பட்டது.
- இலங்கையின் சிவில் உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- இலங்கை மக்கள் பிரச்சினைகளின்போது கிராம தலைவனையும், கிராம மன்றங்களையும் நாடி தீர்ப்புகளைப் பெற்றுக்கொண்டனர். இதற்காக பணம் கொடுக்கவேண்டியிருக்கவில்லை. ஆனால் பின்னர் உருவான நீதிமன்ற முறைகளால் பண செலவுகளுக்கும், வீண் அலைச்சல்களுக்கும் ஆளானார்கள். அம்மக்களுக்கு புதிய நீதிமன்ற முறை மனதிருப்தியளிக்கக்கூடியதாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# டொனமூர் அரசியல் திட்டம்

பிரித்தானிய காலணித்துவ ஆட்சியின் போது இலங்கை 1931ம் ஆண்டு வழங்கப்பட்ட அரசியல் சீர்திருத்தமே டொனமூர் அரசியல் சீர்திருத்தமாகும். இவ் அரசியல் திட்டமானது இலங்கையில் அரசியல், பொருளாதார, மற்றும் சமூக ரீதியில் பல்வேறு வகைகளிலும் மாற்றங்கள் உருவாக அடிப்படையக அமைந்தது. டொனமூர் அரசியல் திட்டம் பின்வரும் பிரதான அம்சங்களை உள்ளடக்கியிருந்தது.

(i) சர்வசன வாக்குரிமை
(ii) அரசாங்க சபை
(iii) நிர்வாக குழு முறை
(iv) தேசாதிபதி
(v) அரசாங்க அதிகாரங்கள்
(vi) அமைச்சரவை
(vii) பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை
(viii) பொதுச்சேவை ஆணைக்குழு

சர்வசன வாக்குரிமையின் விளைவுகள்

1931 டொனமூர் அரசியல் திட்டத்தன் மூலம் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் - பெண் இருபாலாருக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது. இந்நிகழ்வானது உடனடி விளைவுகளை மட்டுமல்லாது அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக நீண்ட கால விளைவுகளுக்கும் பின்னணியாக அமைந்தது. இந்த வகையில் அவற்றை பின்வருமாறு மிகவும் சுருக்கமாக குறிப்பிடலாம்.

(அ) பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு மக்கள் பழக்கப்படுதல்
(ஆ) பொறுப்புக் கூறும் அரசாங்கத்துக்குப் பழக்கப்படுதல்.
(இ) சாதாரண மக்களும் அரசியலில் பங்குபற்ற வாய்ப்பு கிடைத்தல்.
(ஈ) அரசியல் கட்சிகள் உருவாக தளம் இடப்பட்டது.
(உ) சமூக மாற்றம் துரிதமடைதல் அதற்கு அடிப்படையாக அமைந்திருத்தல்.
(ஊ) பொதுமக்களுக்கான சமூக பொதுநல விடயங்கள் வேகமாக செயற்படுத்தப்பட பின்னணியாக அமைந்திருத்தல்.
(எ) பொதுநல அரசாங்கம் உருவாகியமை.
(ஏ) சாதிமுறை வீழ்ச்சியடைய வழிவகுத்தமை.

# டொனமூர் அரசியல் திட்டம் - 1931

அரசாங்க சபை

டொனமூர் அரசியல் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சட்டத்துறை அரசாங்க சபை என அழைக்கப்பட்டது. இது ஓரங்க சபையாகும். இச்சபை 61 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது. இவர்களில்....

- 50 பேர் பிரதேச வாரியாக அமைந்த தேர்தல் தொகுதிகளில் இருந்து சர்வஜன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.
- 8 பேர் சிறுபான்மை நலன்கருதி தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.
- 3 பேர் பிரித்தானிய காரியதரிகளுமாவர்.
- இதன் பதவிக்காலம் 5 வருடங்களாகும்.

அரசாங்க சபையின் பணிகள்

- நாட்டின் சமாதானத்தையும், ஒழுக்கத்தையும், நல்லாட்சியையும் பேணுவதற்கு தேவையான சட்டங்களை இயற்றுதல்.
- வரவு செலவு திட்டத்தை கொண்டுவந்து நிறைவேற்றுதல்
- பொதுமக்களின் பிரச்சினைகள் தொடர்பாக விவாதித்தல்.
- வேறு விடயங்கள் தொடர்பாக வாத, பிரதிவாதங்களை மேற்கொள்ளுதல்.
- தனிநபர் பிரேரனைகளை முன்வைத்தல்.

நிர்வாக குழு முறை

அரசாங்க சபை உறுப்பினர் ஏழு நிர்வாகக் குழுக்களாக பிரிக்கப்பட்டனர். அரசாங்க சபை உறுப்பினர்கள் 61 பேரில் சபாநாயகரையும் மூன்று பிரித்தானிய காரியதரிசிகளையும் தவிர்ந்த ஏனைய 57 உறுப்பினர்களும் இரகசிய வாக்கெடுப்பொன்றின் மூலம் ஏழு நிறைவேற்றுக் குழுக்காக பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு நிறைவேற்றுக் குழுவும் சராசரியாக எட்டு உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது. ஏதாவது ஒன்றில் 07 அல்லது 09 பேர் இடம்பெற்றிருந்தனர். அந்நிறைவேற்றுக் குழுக்கள் பின்வருமாறு.

1. உள்நாட்டு அலுவல்கள்
2. உள்ளூராட்சி
3. விவசாயமும் காணி அபிவிருத்தியும்
4. சுகாதாரம்
5. தொழில், கைத்தொழில் வர்த்தகம்
6. கல்வி
7. தபால் மற்றும் பொதுவசதிகள்.

நிறைவேற்றுக் குழுக்களின் அதிகாரங்களும் பணிகளும்.

- நிர்வாக குழுக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை மேற்பார்வை செய்தல்.
- நிறைவேற்றுக் குழுவுக்குரிய இலாக்காக்களின் வருடாந்த மதிப்பீட்டுத் தொகையை தயாரித்தல்.
- இலாக்காக்களின் சில உயர் அதிகாரிகளை நியமித்தல் தொடர்பாக சிபார்சு செய்தல்.
- நிறைவேற்றுக் குழுக்களுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக கொள்கைகளை வகுத்தல்.
- நிறைவேற்றுக்குழுவுக்குரிய ஏனைய நிறைவேற்று மற்றும் நிர்வாக விடயங்களை கவனித்தல்.

ரத்தப்பா பாடசாலைக் கல்வித் திணைக்களம்

# சோல்பரி அரசியல் திட்டம் - 1948

பிரித்தானிய அரசு இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கியதோடு சோல்பரி அரசியல் யாப்பையும் வழங்கியது. இவ் அரசியல் திட்டம் பல்வேறு முக்கிய அம்சங்களை உள்ளடக்கியிருந்தது. அவற்றை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. மகாதேசாதிபதி
2. பராளுமன்றம்
3. மந்திரி சபை
4. சிறுபான்மை காப்பீடுகள்
5. நீதித்துறை
6. பொதுச்சேவை ஆணைக்குழு
7. நிதிச் சேவை ஆணைக்குழு

மகாதேசாதிபதி

சோல்பரி அரசியல் அமைப்பு பாராளுமன்ற அரசாங்க முறைமை உடையதாகும். பாராளுமன்ற அரசாங்க முறையில் நிறைவேற்றுத் துறையானது நாம நிர்வாகம், உண்மை நிர்வாகம் என இரு பகுதிகளைக் கொண்டதாகும். இதன்படி உண்மை நிர்வாகியாக பிரதம மந்திரியும், நாம நிர்வாகியாக மகாதேசாதிபதியும் கடமையாற்றினர்.

மகாதேசாதிபதியை இலங்கை பிரதம மந்திரியின் ஆலோசனையின்படி பிரித்தானிய மகாராணி நியமித்தார். அவர் ஐந்து வருடங்கள் பதவி வகிப்பது சம்பிரதாயமாக பின்பற்றப்பட்டது.

மகாதேசாதிபதியின் சட்டத்துறை அதிகாரங்கள்

- பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்தல், சிம்மாசன உரை நிகழ்த்துதல்
- மக்கள் சபைக்கு சிறுபான்மை நலன்கருதி 6 உறுப்பினர்களையும், செனறசபையில் பிரதமரின் சிபார்சின்படி 15 உறுப்பினர்களையும் நியமித்தல்.
- பாராளுமன்றம் இயற்றும் சட்ட மசோதாக்களுக்கு மகாராணியார் சார்பில் கையொப்பம் இடுதல்.
- பிரதமரின் ஆலோசனைப்படி பாராளுமன்றத்தை கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல்.

மகாதேசாதிபதியின் நிர்வாகத்தை சார்ந்த அதிகாரங்கள்

- பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்ற ஒருவரை பிரதமராக நியமித்தல்.
- பிரதமரின் ஆலோசனைபடி அமைச்சர்கள், உதவி அமைச்சர்களை நியமித்தல்.
- வெளிநாட்டு தூதுவர்களை வரவேற்றல், பிரதமரின் ஆலோசனைபடி தூதுவர்கள், அரச உயர் அதிகாரிகளை நியமித்தல்.
- பாதுகாப்புக்கு பொறுப்பாக இருப்பதோடு முப்படைத் தளபதிகளை நியமித்தல்.
- அரசின் தலைவர் என்ற வகையில் பொது விழாக்கள், பட்டமளிப்பு வைபவங்களில் கலந்து கொள்ளுதல்.
- அரச இலட்சினையை தனது காப்பில் வைத்திருத்தல்.

# சோல்பரி அரசியல் திட்டம் - 1948

சோல்பரி பாராளுமன்றம்

சோல்பரி பாராளுமன்றம் இரண்டு சபைகளையுடையதாகும். மக்கள் பிரதிநிதிகள் சபை, செனற்சபை என்பனவே அவைகளாகும். இதன் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும். மக்கள் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கையானது தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு 75,000 மக்களுக்கு ஒரு தொகுதி என சனத்தொகையின் அடிப்படையிலும் 1000 சதுர மைலுக்கு ஒன்று என நிலப்பரப்பின் அடிப்படையிலும் தீர்மானித்தது. இதன்படி முதலாவது பாராளுமன்றத்தில் மக்கள் சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 95 பேரும் சிறுபான்மை நலன் கருதி நியமிக்கப்பட்ட 6 பேருமாக 101 உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர்.

பாராளுமன்றத்தின் அதிகாரங்களும் கடமைப் பொறுப்புக்களும்

- சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கு தேவையான சட்டங்களை இயற்றுதல்.
- வரவு செலவு திட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றுதல்.
- பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் அரசியல் திட்ட திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- நிறைவேற்றுத் துறைக்கு ஆதரவு வழங்குதல் மற்றும் நிறைவேற்றுத்துறையை கட்டுப்படுத்துதல்.

பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரத்தின் மீதான வரையறைகளும் கட்டுப்பாடுகளும்

சோல்பரி பாராளுமன்றம் இறைமை பொறுந்தியோர் சட்டமன்றத்தைப்போல பரிபூரணமான இறைமை அதிகாரத்தை பெற்று விளங்கவில்லை. அதன் சட்டவாக்க இறைமைமீது பல்வேறு கட்டுப்பாடுகளும் வரையறைகளும் விதிக்கப்பட்டிருந்தன. எனவே சோல்பரி சட்டத்துறை பூரண இறைமையுடைய சட்டத்துறையாக அமைந்திருக்கவில்லை என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அதன் வரையறைகளை பின்வருமாறு சுட்டிக்காட்டலாம்.

- அரசியல் அமைப்பின் 29(2) ஆம் உறுப்புறை
- நீதிப்புணராய்வு அதிகாரம்
- யாப்பின் 29ஆம் உறுப்புரை

சிறுபான்மை காப்பீடுகள்

சோல்பரி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த சிறுபான்மை இனத்தலைவர்கள், தங்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசியல் திட்ட ரீதியாக காப்பீடுகளை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட சிறுபான்மை காப்பீடுகளுக்கான சில ஏற்பாடுகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- அரசியல் அமைப்பின் 29(2) ஆம் சரத்து
- மக்கள் சபையில் 6 நியமன உறுப்பினர்கள்
- செனற்சபை
- பல அங்கத்துவ தேர்தல் தொகுதிகள்
- நீதிச்சேவை மற்றும் பொதுச்சேவை ஆணைக்குழுக்கள்
- மகாதேசாதிபதி
- கோமறைக்கழகம்

# முதலாம் குடியரசு யாப்பு – 1972

1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெறறிப் பெற்ற SLFP தலைமையிலான திருமதி. ஸ்ரீமா பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) அரசாங்கம் 1972 மே 22ஆம் திகதி முதல் குடியரசு யாப்பை கொண்டவந்தது. இவ் யாப்பின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு.

1. மக்கள் இறைமை
2. அடிப்படை உரிமைகள்
3. குடியரசு தலைவர்
4. தேசிய அரசுப் பேரவை
5. பொதுச்சேவை மற்றும் நீதிச்சேவை ஆலோசனை சபைகள்
6. அரசியல் அமைப்பு நீதிமன்றம்

அடிப்படை உரிமைகள்

முதலாம் குடியரசு அரசியல் யாப்பில் 6ஆம் அத்தியாயத்தில் 18(1)ஆம் சரத்து பிரஜைகளின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் குறிப்பிடுகின்றது. அவற்றை பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

(அ) சட்டத்தின் முன் சகலரும் சமமானவர்கள். சட்டத்தின் மூலம் கிடைக்கும் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள்.

(ஆ) சட்டப்படியன்றி எவரும் உயிரையோ, சுதந்திரத்தையோ சொந்த பாதுகாப்பையோ இழத்தலாகாது.

(இ) சட்டப்படியன்றி எவரும் கைது செய்யப்படவோ, தடுத்து வைக்கப்படவோ, சிறையில் அடைக்கப்படவோ கூடாது.

(ஈ) சிந்தனை சுதந்திரம், சமய சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

(உ) தனது கலாசாரத்தை அனுபவிக்கவும், அபிவிருத்தி செய்யவும் உரிமை உள்ளது.

(ஊ) அமைதியான முறையில் ஒன்று கூடும் உரிமை சகல பிரஜைகளுக்கும் உள்ளது.

(எ) பேச்சு, கருத்து வெளியிடல் சுதந்திரம் என்பன சகல பிரஜைகளுக்கும் உள்ளது.

(ஏ) அரச மற்றும் உள்ளூராட்சி சேவைகளில் சாதி, இன, சமய, பால் வேறுபாடுகள் காட்டலாகாது.

(ஐ) இலங்கை முழுவதும் தடையின்றி பிரயாணம் செய்வதற்கும், தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்கான சுதந்திரம் சகலருக்கும் உள்ளது.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

# முதலாம் குடியரசு யாப்பு – 1972

குடியரசின் தலைவர் - ஜனாதிபதி

முதலாம் குடியரசு யாப்பு மந்திரி சபை அரசாங்க முறையை உடையதாகும். இதன்படி நிறைவேற்றுத்துறை நாமநிர்வாகம், உண்மை நிர்வாகம் என இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும். உண்மை நிர்வாகம் பிரதமரிடமும், நாம நிர்வாகம் ஜனாதிபதியிடமும் காணப்பட்டது. குடியரசின் தலைவரான ஜனாதிபதி பிரதம மந்திரியால் நியமிக்கப்பட்டார். இவரின் பதவிக்காலம் நான்கு வருடங்களாகும்.

ஜனதிபதியின் சட்டத்துறை சார்ந்த அதிகாரங்கள்

- தேசிய அரசுப் பேரவையை கூட்டுதல், ஒத்தி வைத்தல், கலைத்தல் இதனை பிரதமரின் சிபார்சின் படி மேற்கொண்டார்.
- தேசிய அரசுப் பேரவையின் சடங்கு முறையான அமர்வுகளுக்கு தலைமைத் தாங்குதல், சிம்மாசன உரை நிகழ்த்துதல்.
- தேசிய அரசுப் பேரவையின் செயலாளர் நாயகத்தை நியமித்தல்.

ஜனாதிபதியின் நிறைவேற்றுத்துறை சார்ந்த அதிகாரங்கள்

- யாப்பின் 19ஆம் சரத்தின்படி ஜனாதிபதியே அரசின் தலைவராக விளங்குகின்றார்.
- ஆட்சித்துறையின் தலைவரும், ஆயுதப்படைகளின் தலைவராயும், முப்படைகளின் தலைவராகவும் விளங்குவதோடு முப்படை தலைவர்களையும் நியமனம் செய்கின்றார்.
- போர் பிரகடனம், சமாதான உடன்படிக்கைகளை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்று விளங்குகின்றார்.
- பிரதமரை நியமிப்பதோடு அவரின் சிபார்சின்படி அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களை நியமித்தல்.
- நிறைவேற்றுத்துறையின் பல்வேறு உயர் அதிகாரிகளை நியமித்தல், வெளிநாட்டு தூதுவர்களை வரவேற்று அங்கீகரித்தல்.

ஜனாதிபதியின் நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள்

- மேன்முறையீட்டு, உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்.
- நீதிச்சேவை ஆலோசனை சபை உறுப்பினர்களை நியமித்தல்.
- குற்றவாளிகளின் தண்டனைகளை குறைத்தல், ஒத்திவைத்தல், மன்னித்தல்.

# முதலாம் குடியரசு யாப்பு – 1972

தேசிய அரசுப் பேரவை

முதலாம் குடியரசு சட்டத்துறை தேசிய அரசுப் பேரவை என அழைக்கப்பட்டது. இது ஓரங்க சபையையுடையதாகும். இதன் பதவிக்காலம் ஆறு வருடங்களாகும். இதன் உறுப்பினர்கள் தொகுதிவாரி தேர்தல் மூலம் சர்வசன வாக்குரிமையின்படி தெரிவு செய்யப்பட்டனர். 75,000 பேருக்கு ஒன்று, 1000 சதுர மைலுக்கு ஒன்று என்ற அடிப்படையிலில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டன.

தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்க அதிகாரங்கள்

- யாப்பின் 3ம் சரத்து இலங்கை குடியரசின் இறைமை மக்களிடமே உள்ளது எனவும், 4ஆம் சரத்து மக்களின் இறைமை மக்களால் தெரிவு செய்யப்படும் தேசிய அரசுப் பேரவையால் பிரயோகிக்கப்படும் என்கிறது.
- சாதாரண சட்டம் முதல் சகலவிதமான சட்டங்களையும் கொண்டுவந்து இயற்ற அதிகாரம் பெற்றிருந்தது. நாட்டில் நல்லாட்சியையும், சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு தேவையான சட்டங்களை கொண்டுவந்து இயற்றக்கூடியதாக விளங்கியது.
- வரவு செலவு திட்டத்தை கொண்டுவந்து நிறைவேற்றும் அதிகாரத்தையும் பெற்றிருந்தது.
- நிறைவேற்றுத்துறைக்கு ஆதரவு வழங்கவும் அதேநேரம் நிறைவேற்றுத்துறையை கட்டுப்படுத்தவும் அதிகாரம் பெற்றிருந்தது.
- தேசிய அரசுப் பேரவை சட்டவாக்க அதிகாரத்தில் மீயுயர் சபையாக விளங்கியது.
- தேசிய அரசுப் பேரவையை கேள்வி கேட்கும் அதிகாரத்தை நீதித்துறை பெறவில்லை.
- சட்டவாக்க அதிகாரத்தை தேசிய அரசுப் பேரவையே முழுமையாக வைத்திருந்ததோடு, அதனை துரத்தலோ, கையளித்தலோ கூடாது என யாப்பின் 45(1) சரத்து குறிப்பிடுகின்றது.
- இதன் அடிப்படையில் தேசிய அரசுப் பேரவை சட்டவாக்க அதிகாரங்களை பூரணமாக பெற்று விளங்கியதோடு, நிறைவேற்றுத்துறையை கட்டுப்படுத்தவும் அதிகாரம் பெற்றிருந்தது. அத்தோடு நீதித்துறைக்கு சட்டப்புனராய்வு அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதால் இச்சபையானது முத்துறைகளையும் கட்டுப்படுத்தக் கூடியதாக விளங்கியது என விமர்சிக்கப்படுகின்றது.

குறிப்பு

இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள குறிப்புகள் முழுமையான விடைகளோ, விளக்கங்களோ இல்லை என்பதனை மானவர்கள் கவனத்தில் கொள்ளுதல் அவசியம். இங்கு தரம் 12 பாடத்திட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளுக்கான சிறுகுறிப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. எனவே இவை தொடர்பாக மேலதிகமாக மேலும் தேடி ஆயத்தப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

- கடந்தகால அரசறிவியல் பரீட்சை வினாவிடை புத்தகம் மற்றும் புள்ளி வழங்கல் திட்டம் - பரீட்சை திணைக்களம்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - 2017 - தேசிய கல்வி நிறுவகம்
- இலங்கை அரசியல் - அம்பலவானர் சிவராசா
- இலங்கையின் அரசியல் யாப்புகள் - சி. அ. யோகிலிங்கம்
- அரசறிவியல் ஓர் அறிமுகம் - பாகம் - 3 - A. C. M. பலீல்
- இலங்கையின் அரசியல் திட்டங்களின் பரினாம வளர்ச்சி - வேலுப்பிள்ளை குணரத்திணம்

பயிற்சி வினாக்கள்

1. இலங்கையில் பிரித்தானிய குடியேற்ற நாட்டாட்சியின் அரசியல், பொருளாதார, சமூக விளைவுகளை விமர்சன ரீதியாக ஆராய்க.

2. சிறுகுறிப்பு எழுதுக.
   (i) கோல்புறாக் - கமரன் சிபார்சுகள்
   (ii) கோல்புறாக் - கமரன் சிபார்சுகளின் நிறைகளும் - குறைகளும்

3. 1833 கோல்புறாக் - கமரன் சீர்திருத்தங்கள் இலங்கையின் பழைய யுகத்தின் முடிவினை குறித்து நின்றதோட ஒரு புதிய யுகத்தை ஆரம்பித்து வைத்தது. நீர் உடன் படுவீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

4. இலங்கையில் ஜனநாயகத்தின் வளர்ச்சிக்கு டொனமூர் அரசியல் சீர்திருத்தங்கள் வழங்கிய பங்களிப்பினை ஆராய்க.

5. சிறுகுறிப்பு எழுதுக.
   (i) சர்வசன வாக்குரிமையும் அதன் விளைவுகளும்
   (ii) நிருவாக குழுமுறையின் நிறைகளும் குறைகளும்

6. டொனமூர் அரசாங்க சபை சட்டவாக்கம் மற்றும் நிர்வாகம் இரண்டிலும் இலங்கை பிரதிநிதிகளுக்கு பொறுப்புகளையும் பயிற்சியையும் வழங்கியது. விளக்குக.

பத்தாப்பாணக் கல்வித் திணைக்களம்

## பகுதி - **A**

1. முரண்பாடு தொடர்பான அரசியல் வகைப்படுத்தலுக்கிணங்க முரண்பாட்டின் இரு வகைகளைக் குறிப்பிடுக.
   (i).....................................................................................................................
   (ii)....................................................................................................................

2. மோதல் தடுப்புக்கும், மோதல் முகாமைத்துவத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.
   (i).....................................................................................................................
   (ii)....................................................................................................................

3. 1833 கோல்புறூக் - கமரன் ஆணைக்குழுவின் நீதித்துறை சிபார்சுகள் இரண்டு தருக.
   (i).....................................................................................................................
   (ii)....................................................................................................................

4. 1931 டொனமூர் சீர்திருத்தம் வழங்கிய சர்வசன வாக்குரிமையின் சமூக விளைவுகள் இரண்டு தருக.
   (i).....................................................................................................................
   (ii)....................................................................................................................

5. 1931 டொனமூர் நிறைவேற்றுக் குழு முறைமையின் குறைப்பாடுகள் இரண்டு தருக.
   (i).....................................................................................................................
   (ii)....................................................................................................................

6. காலணித்துவ ஆட்சியில் பொருளாதார விளைவுகள் இரண்டு தருக.
   (i).....................................................................................................................
   (ii)....................................................................................................................

7. சோல்பரி பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் பெயரிடுக.
   (i).....................................................................................................................
   (ii)....................................................................................................................

8. 1972 யாப்பின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அம்சங்கள் இரண்டினை பெயரிடுக.
   (i).....................................................................................................................
   (ii)....................................................................................................................

9. 1948 சோல்பரி மற்றும் முதலாம் குடியரசு நாமநிர்வாகங்களை குறிப்பிடுக.
   (i).....................................................................................................................
   (ii)....................................................................................................................

10. தேசிய அரசுப் பேரவையின் பணிகள் இரண்டு தருக.
   (i).....................................................................................................................
   (ii)....................................................................................................................

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## பகுதி - A

1 தொடக்கம் 15 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களை கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுகள் சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவுசெய்க.

1. அரசியல் விஞ்ஞானம் என்பது
   A - அரசு அரசாங்கம், அரசியல் ஆகியன பற்றிக் கற்கும் ஒரு பாடமாகும்.
   B - மனித வாழ்வின் ஆரம்பம், இருப்பு, முடிவு, என்பவற்றைக் கற்கும் ஒரு பாடமாகும்.
   C - தத்துவம், சிந்தனை, கோட்பாடு, கருத்தியல் ஆகிய கிளைகளை உள்ளடக்கியதாகும்.
   D - ஒரு சமூக விஞ்ஞானமாகும்.
   E - கோட்பாட்டு அரசியல், நடைமுறை அரசியல் என்ற இரு பகுதிகளைக் கொண்டதாகும்.
   (i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

2. அரசியல் என்பது
   A - அரசாங்கம் பற்றிய கலையும் விஞ்ஞானமுமாகும்.
   B - விழுமியங்களை அதிகார பூர்வமாகப் பகிர்ந்தளிக்கும் வழிமுறையாகும்.
   C - சமூக, பொருளாதார, அரசியல் விவகாரங்களின் மீதான மோதும் நலன்களின் பெறுபேறாகும்.
   D - மத விழுமியங்களின் தளத்தையுடைய சமூகமொன்றை உருவாக்குவது தொடர்பான அறம்சார் செயற்பாடாகும்.
   E - அரசியல் விஞ்ஞானத்தின் நடைமுறைப் பகுதி எனக் கருதப்படுகின்றது.
   (i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

3. அரசியல் விஞ்ஞானக் கற்கை பயன்படுவது
   A - அரசியல் விடயங்களை பற்றி பகுத்தறிவுசார் பெறுமானத் தீர்ப்புகளை மேற்கொள்வதற்காகும்.
   B - அரசியல் வகிபங்குகளைத் தாக்ககரமாகவும் செயற்றிறனுடனும் புரிவதற்காகும்.
   C - தான் விரும்பாத ஒருவர் மீது சேரு பூசுவதற்கும் அவரது நடத்தையைக் கொலை செய்வதற்குமாகும்.
   D - அரசியல், நிருவாக மற்றும் இராஜதந்திரப் பரப்புகளில் மேன்மை நிலையை அடைவதற்காகும்.
   E - பிரஜைகளின் கடமைகளையும் பொறுப்புகளையும் உயர் உணர்வுடன் நிறைவேற்றுவதற்காகும்.
   (i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

4. நவீன சமூகங்களில் அரசானது

A - உள்வாரி மற்றும் வெளிவாரி இறைமையை கொண்டுள்ளது.

B - அரசாங்கத்துக்கு சமமானது

C - அதன் உறுப்பினர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கின்றது.

D - தேசிய அரசு எனவும் அழைக்கப்படுகின்றது.

E - நிர்பந்த அதிகாரத்தின் ஏகபோக உரிமையைக் கோருகின்றது.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

5. நடத்தை வாதமானது

A - அவதானிக்கத்தக்க மனித நடத்தையை மட்டும் தளமாக கொண்டு சமூகக் கோட்பாடுகள் கட்டியெழுப்பப்படும் வேண்டும் என்ற நம்பிக்கையின்படி நிறுவப்பட்டுள்ளது.

B - அரசியல் விஞ்ஞானம் தொடர்பான பெறுமானஞ்சார் விடயங்களைக் கற்பதற்கு அதிக கரிசனை காட்டுவதனை வலியுறுத்துகிறது.

C - ஆராய்ச்சிகள் மற்றும் புள்ளிவிபரப் பகுப்பாய்வினூடாக அளவிடக்கூடிய தரவுகளின் சேகரிப்போடு சம்பந்தப்படுகிறது.

D - எதிர்வு கூறக் கூடிய ஆற்றலையுடைய அனுபவம்சார் கோட்பாடுகளைக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றது.

E - உறுதிப்படுத்தக்கூடிய விளக்க ரீதியான கோட்பாடுகளின் அடிப்படையில் விஞ்ஞான ரீதியான அறிவை அபிவிருத்தி செய்ய முடியும் என்று வலியுறுத்துகின்றது.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

6. மரபு ரீதியான கோட்பாட்டிற்கிணங்க இறைமை

A - அரசின் மீயுயர் அதிகாரத்தை குறித்து நிற்கின்றது.

B - அந்நியப்படுத்தப்பட முடியாதது.

C - தேவையான போது பிரிக்கப்படக் கூடியது.

D - சட்டத்தின் தோற்றுவாய்.

E - ஆட்சியாளருக்கு மாத்திரமே உரித்தாகின்றது.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

7. முதலாளித்துவம் என்பது

A - ஆரம்பத்தில் தலையிடாக் கொள்கையின் அடிப்படையில் தாபிக்கப்பட்டது.

B - நிறை சந்தைப் போட்டியை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டுள்ளது.

C - ஒழுங்குபடுத்தப்படாத சந்தைப் பொருளாதாரமானது இயல்பாகவே சமநிலையை நோக்கி நகர்கிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தாபிக்கப்பட்டது.

D - இன்றைய உலகில் சுதந்திரமான சந்தை முதலாளித்துவம் மற்றும் அரச முதலாளித்துவம் என்ற வகையில் செயற்படுத்தப்படுகின்றது.

E - பொருளாதார வளர்ச்சியோடு மறுபங்கீடு என்ற கொள்கையின் மூலம் சமூக நீதியை ஏற்படுத்துவதில் கரிசனை கொள்கிறது.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

சமதர்மம் என்பது

A - சமமான குடியுரிமை, சமமான சந்தர்ப்பங்கள் என்ற மூலக கொள்கையின் அடிப்படையில் அமைந்த சமூக முறைமையொன்றாகும்.

B - உற்பத்திக் கருவிகள் மற்றும் பங்கீட்டின் மீது அரசின் உடமை என்பதனை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார முறைமையாகும்.

C - தாராள ஜனநாயகத்துக்கு மாற்றீடாகவுள்ள ஓர் அரசியல் முறைமையாகும்.

D - பல கட்சி முறையின் அடிப்படையில் செயற்படும் ஓர் ஆட்சி முறைமையாகும்.

E - முதலாளித்துவத்தினால் உருவாக்கப்படும் சமூக அசமத்துவத்திற்கு தீர்வுகாண முயலும் ஓர் அரசியல் கருத்தியலாகும்.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

8. சமூக ஜனநாயகம் என்பது

A - சந்தை முதலாளித்துவத்திற்கும் புரட்சிகர சமதர்மத்திற்கும் மாற்றீடான ஒரு பொருளாதார மாதிரியாகும்.

B - சந்தைப் பொருளாதாரத்திற்கும் சமூக நீதிக்கும் இடையில் உடன்பாட்டை ஏற்படுத்துவதில் அக்கறை கொள்கிறது.

C - புரட்சியினூடாக சமூக மாற்றம் என்ற கால்மாக்சின் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளும் ஓர் அரசியல் கோட்பாடாகும்.

D - சந்தைப் பொருளாதாரம், மலர்ச்சிச் சமதர்மம், நலன்புரி அரசு என்ற மூன்று தூண்களின் மீது தாபிக்கப்பட்டதாகும்.

E - ஜனநாயக வழிமுறைகளினூடாக சமதர்ம சமூகமொன்றைத் தாபிப்பதை இலக்காகக் கொண்டதாகும்.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

9. மந்திரி சபை அரசாங்க முறை என்பது

A - பாராளுமன்ற அரசாங்க முறைமை என்றும் அழைக்கப்படுகின்றது.

B - வலு வேறாக்க கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

C - நாம மற்றும் உண்மை என இரு நிறைவேற்று பகுதிகளைக் கொண்டதாகும்.

D - நேரடியாகத் தெரிவு செய்யப்படும் சட்டத்துறையையும் அதே சட்டத்துறையில் இருந்து தெரிவுசெய்யப்படும் நிறைவேற்றுத் துறையையும் கொண்டிருக்கும்.

E - ஜனாதிபதி அரசாங்க முறையோடு ஒப்பிடுகையில் அதிக ஜனநாயகத் தன்மையும் குறைந்த செயற்திறனையும் கொண்டதாகும்.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

10. ஜனாதிபதி அரசாங்க முறை என்பது

A - சட்டத்துறைக்கு வெளியில் இருந்து தனியாக தெரிவுசெய்யும் நிறைவேற்று பகுதியாகும்.

B - மக்களால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தெரிவுசெய்யப்படும நிறைவேற்றுத் துறையினால் தலைமை தாங்கப்படுகின்றது.

C - அதிக வினைத்திறன்மிக்கதும் ஜனநாயகத் தன்மை வாய்ந்ததும் என கருதப்படும்.

D - அதிகாரப் பிரிவினை என்ற மூலக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

E - அவசரகால நிலைமைகளுக்கு அதிகம் பொருந்தும் என கருதப்படுகின்றது.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

11. அனைத்தாண்மை அரசாங்க முறை என்பது

A - தம்மைத் தாமே நியமித்துக் கொண்ட ஆட்சியாளரால் அரச அதிகாரத்தைப் பிரயோகிக்கும் ஓர்அரசாங்க முறைமையாகும்.

B - சகல அரச அதிகாரிகளும் ஆதரவு நல்கும் முறையின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஓர் அரசாங்க முறைமையாகும்.

C - அரச அதிகாரம் சில்லோராட்சி உயர் குழாமினரால் பிரயோகிக்கப்படும் ஓர் அரசாங்க முறைமையாகும்.

D - நிச்சயமான அரசியல் பொருளாதார தொலை நோக்கின்றி நாட்டை ஆளும் ஓர் அரசாங்க முறையாகும்.

E - ஆட்சி பற்றிய எவ்விடயத்திலும் மக்களின் குரலில்லாத ஓர் அரசாங்க முறைமையாகும்.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

12. சட்டத்தின் ஆட்சி என்ற எண்ணக்கரு கவனம் செலுத்துவதாவது.

A - சட்டத்தின் முன் சகலரும் சமன்

B - ஆட்சியாளர்கள், மற்றும் ஆளப்படுவோர்கள் ஆகிய இருதரப்பினரும் அரசின் சட்டங்களுக்கு கட்டாயம் கீழ்படிய வேண்டும்.

C - ஆட்சியாளர் சட்டத்திலிருந்து விடுபடும் சுதந்திரத்தை அனுபவிக்கின்றார்.

D - கடந்த காலத்தை பாதிக்கும் சட்டங்களை உருவாக்குவது பொருத்தமற்றது.

E - குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதியாக கருதப்பட வேண்டும்.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

13. அதிகாரப் பிரிவினை எண்ணக்கரு அனுமானிப்பதாவது.

A - பிரஜைகளின் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துவதற்கு அரசின் அதிகாரம் மத்திய மயப்படுத்தப்படுவதனை தவிர்ப்பது அவசியமாகும்.

B - பிரிக்கப்பட்ட அதிகாரங்களை அரசாங்கத்தின் வேறுபட்ட துறைகள் பிரயோகிக்க வேண்டும்.

C - எதேச்சை அதிகாரத்தை தடுப்பதற்கு தடைகள் மற்றும் சமன்பாடுகள் பொறிமுறை அவசியமாகும்.

D - தனி முதன்மை அதிகாரம் ஊழலுக்கு வழி செய்வதில்லை.

E - அதிகாரத்தை அதிகாரத்தால் கட்டுப்படுத்த முடியும்.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

14. அரசியல் யாப்பு என்பது

A - ஆட்சிக்கான சட்டத் தளத்தை வழங்கும் விதிகளின் தொகுதியைக்கொண்டுள்ள சட்ட ஆவணமாகும்.

B - ஜனநாயக அரசாங்கத்தின் அத்தியாவசியமான அங்கம் என கருதப்படுகின்றது.

C - அரசியல்வாதிகளின் உரிமைகளையும், கடமைகளையும் பாதுகாக்கும் ஆவணமாகக் கருதப்படுகின்றது.

D - அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்தும் பிரதான சட்ட ஆவணமாகும்.

E - யாப்புறுவாதத்தின் விருத்திக்கான தளத்தை வழங்கும் ஆவணமாகும்.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

16 தொடக்கம் 20 வரையிலான வினாக்களை ஒவ்வொன்றும் ஐந்து கூற்றுக்களை கொண்டுள்ளதுடன் அவற்றுள் ஒரு கூற்று பிழையானதாகும். பிழையான கூற்றை தெரிவு செய்க.

15. சிவில் சமூகம் என்பது

(i) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் இல்லாத எண்ணக்கருவொன்றாகும்.

(ii) அரசின் கடடுப்பாட்டுக்கு வெளியேயான சமூக வாழ்வின் ஒரு பகுதியை விபரிக்கன்றது.

(iii) அரசியல் சமூகத்துக்கு ஒப்பானது என அறியப்படுகின்றது.

(iv) குறிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான நோக்கங்களுக்காக இருக்கின்ற கூட்டுச் சமூக இணைவு என விபரிக்கப்படுகின்றது.

(v) சமூகத்திலுள்ள தன்னார்வ சங்கங்களையும் குழுக்களையும் கொண்டமைந்ததாகும்.

16. பிரதிநிதித்துவம் என்பது

(i) ஜனநாயக அரச முறைமை ஒன்றில் அரசாங்கத்தையும் ஆளப்படுவேரையும் தொடர்புபடுத்தும் பிரதான வழிமுறையாகும்.

(ii) தெரிவுசெய்வோருக்கும் தெரிவு செய்யப்படுவோருக்கும் இடையிலான தொடர்பைக் காட்டும் ஓர் அளவுகோலாகும்.

(iii) தேர்தல்களின் ஊடாக மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

(iv) பொறுப்பாண்மை, ஒப்படைப்பு. அங்கீகரித்தல், ஒத்திருத்தல் என்ற நான்கு வகைகளைக் கொண்டுள்ளது.

(v) ஓர் அரசியல் முறைமையிலுள்ள அரசியல், பொருளாதார, சமூகக் குழுக்களுக்கு நியாயமாக பிரதிநிதித்துவத்தை உத்தரவாதப்படுத்தும் ஒரே வழிமுறையாகும்.

17. அரசியல் கட்சிகள்

(i) அரசாங்கத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்துகின்றது.

(ii) அரசியல் பதவிகளுக்கு தலைவர்களை ஆட்சேர்க்கின்றது.

(iii) முக்கியமான அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுகின்றது.

(iv) பொதுக்கொள்கை செயன்முறைக்கு பொதுசன அபிப்பிராயத்தை கொண்டுவருகின்றது.

(v) ஆட்சி முறையில் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

18. அரசு என்பது

(i) ஏனைய சமூக ஒழுங்கமைப்புகள் அனைத்தையும் விட மேலானதாகக் காணப்படும் ஒரு மனித சமூகமாகும்.

(ii) இறைமை என்ற ஆணையதிகாரத்தின் தனியான உரித்தாளனாகும்.

(iii) தேசங்களுக்கு மத்தியிலான அரசியலின் பிரதான செயற்பாட்டாளராகும்.

(iv) தனக்கேயுரிய உத்தியோக பெயர், தேசியகீதம், தேசிய கொடி என்பவற்றைக் கொண்ட ஓர் அரசியல் ஒழுங்கமைப்பாகும்.

(v) அரசாங்கத்தின் அரசியல் கரமாகும்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

19. அரசாங்கம் என்பது
(i) தேசிய மட்டத்தில் ஒற்றையாட்சி அல்லது சமஷ்டியாட்சி என்ற அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்.
(ii) அரசின் அதிகாரங்களையும் பணிகளையும் புரிவதற்குப் பொறுப்பாக்கப்பட்ட அரசின் சேவகனாகும்.
(iii) அரசு என்ற கப்பலின் சுக்கானை இயக்குவதாகும்.
(iv) அரசின் ஆள்புலத்தில் வாழும் சகல மக்களையும் கொண்ட ஒரு மானிடச் சமூகமாகும்.
(v) ஜனநாயக அல்லது புரட்சிகர முறையில் மக்களால் மாற்றியமைக்கக்கூடிய ஓர் அரசியல் நிறுவனமாகும்.

21 தொடக்கம் 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியை தெரிவு செய்க.

20. இறைமை அதிகாரம் என்பது
A - அரசுக்கு மட்டும் உரித்தான உயர் அதிகாரமாகும்.
B - தன்னிகரற்றதும் வரையறையற்றதுமான அதிகாரமாக கருதப்படுகின்றது.
C - மனிதச் சமுதாயமானது அரசு என கருதப்படுவதற்கு அத்தியாவசியமான மூலக்கூறாகும்.
D - 1648 வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கை மூலம் அரசுகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரமாகும்.
E - அரசாக இருப்பதனால் அரசுக்கே உரித்தாகும் தனித்துவமான அதிகாரமாகும்.
(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

21. சட்டத்துறை என்பது
A - ஜனநாயக ஆட்சியின் அத்தியாவசியமான அங்கமாகும்.
B - ஒற்றை மற்றும் இருமன்ற முறையின் அடிப்படையில் அமைந்திருக்கும்.
C - அரசாங்கத்து சட்டமுறைத் தன்மையை வழங்கும் பிரதான அரசாங்கத் தாபனமாகும்.
D - அரசியல் கட்சிகளினால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களையே கொண்டிருக்கும்.
E - அந்தஸ்து மற்றும் வரப்பிரசாதங்களில் சமமான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.
(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

22. ஒற்றையாட்சி அரசாங்கம் என்பது
A - அதிகாரமற்ற ஒரு மத்திய அரசாங்கம் உருவாகுவதற்கு வழியமைக்கின்றது.
B - சிறிய அரசுகளுக்கு மிகவும் பொருததமானது.
C - முழு நாட்டிலும் ஒருமைத் தன்மையான சட்ட மற்றும் நிர்வாக முறைமையைப் பேணுவதற்கு உதவும்.
D - அரசாங்கத்தின் வேலைகள் இருமுறை மேற்கொள்ளப்படுவதால் ஏற்படும் வீன்விரயத்தை தடுக்க உதவும்.
E - அரசாங்கத்தின் பொறுப்புக் கூரலையும், பொறுப்பாதலையும் தெளிவாக இனங்காண உதவும்.
(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

23. சமஷ்டி அரசாங்கம் என்பது



மத்தியமாகாணக் கல்வித்திணைக்களம்

A - பிறிதொரு அதிகார வேறாக்க மாதிரியாகும்.
B - ஒற்றுமையினதும் வேற்றுமையினதும் நன்மைகளை ஒன்றிணைப்பதாகும்.
C - அதிகாரம் மத்தியமயப்படுத்தப்பட்ட மத்திய அரசாங்கம் அமைவதற்கு வழிவகுக்கும்.
D - பிரதேச மட்டத்தில் செறிந்துள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க உதவும்.
E - பரப்பளவில் பெரிய அரசுகளுக்கு சாலவும் பொருந்தும்.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

24. 1833 கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்களின் சில பாதகமான விளைவுகளாவன.
A - இலங்கை ஓர் ஐக்கிய அரசாகத் தோற்றம் பெற்றமை
B - இனவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட்டமையால் இனங்களுக்கிடையில் இனவாதம் வளர்ச்சியடைந்தமை.
C - தன்னிறைவுமிக்க கிராமிய பொருளாதாரம் அழிவுற்றமை.
D - வர்த்தகப் பயிர்ச் செய்கை அறிமுகம் செய்யப்பட்டமையால் மத்திய மலைநாட்டில் காணிப்பிரச்சினை உருவாகியமை.
E - வர்த்தகப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான உழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு இந்திய ஊழியர்களை இறக்குமதி செய்தமையால் இந்திய தமிழர் பிரச்சினை உருவாகியமை.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

25. 1833ஆம் ஆண்டு கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தின் பரிந்துரைகளாவன.
A - இராஜகாரிய முறையினை ஒழித்தல்
B - நிர்வாக மற்றும் சட்ட சபைகளை ஸ்தாபித்தல்
C - ஒரு பொதுவான குற்றவியல் நீதி முறைமையினை அறிமுகப்படுத்தல்.
D - சகல வர்த்தக ஏகபோக உரிமைகளையும் முடிவுக்கு கொண்டுவருதல்.
E - நீதித்துறை தொடர்பான ஆளுநரின் அதிகாரத்தினை பலப்படுத்தல்.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

26. டொனமூர் அரசாங்க முறையின் தனித்துவமான பண்புகளாவன.
A - அமைச்சரவையானது தேசிய மற்றும் காலணித்துவப் பிரதிநிதிகளைக் கொண்டிருந்தமை.
B - சட்டத்துறையானது சட்டவாக்க, நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருந்தமை.
C - தேசாதிபதி சாதாரன நேரங்களில நாமநிறைவேற்றாளராகச் செயற்பட எதிர்பார்க்கப்பட்டமை.
D - ஏழு நிறைவேற்றுக் குழுக்களும் அரசாங்க சபையின் சகல உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருந்தமை.
E - ஏகாதிபத்திய நலன்களை உறுதிப்படுத்தும் “காவல் நாய்கள்” என்று அழைக்கப்பட்ட மூன்று அரச உத்தியோகத்தர்கள் காணப்பட்டமை.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

27. சோல்பரி அரசியல் யாப்பின் பிரதான பண்புகளாவன.

A - நாமநிர்வாகம், உண்மை நிர்வாகம் என்பவற்றைக் கொண்ட இரட்டை நிறைவேற்றுத் துறை.

B - இலங்கை வேண்டி நிற்கும் போது இலங்கை தொடர்பாக சட்டம் செய்வதற்கு பிரித்தானிய பாராளுமன்றம் அதிகாரம் பெற்றமை.

C - கீழ் மன்றிலிருந்து மட்டும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட உண்மை நிறைவேற்றுத்துறை.

D - மக்கள் பிரதிநிதிகள் சபையையும் செனற் சபையையும் கொண்ட இருமன்றச் சட்டத்துறை.

E - பிரித்தானியக் கோமறைக் கழகத்தை உச்சநீதிமன்றமாகக் கொண்ட நீதித்துறை முறைமை.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

28. 1972ஆம் யாப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவை

A - நிர்வாக, சட்ட மற்றும் நீதித்துறை அதிகாரங்களைக் கொண்டிருந்தது.

B - அரசின் மீயுயர் நிறுவனமாகக் காணப்படடது.

C - பொதுச் சேவையை கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருந்தது.

D - ஓரங்க சட்ட சபையாகக் காணப்பட்டது

E - அரசியல் அமைப்பு நீதிமன்றத்திற்கு பதிலளிக்க கடமைப்பட்டிருந்தது.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

29. 1972 முதலாம் குடியரசு யாப்பானது

A - இலங்கையைச் சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஒரு குடியரசாக ஆக்கியது.

B - ஜனாதிபதி அரசாங்க முறையை தாபித்தது.

C - பிரித்தானிய முடியை அரசின் தலைவராக அங்கீகரிப்பதைக் கைவிட்டது.

D - சட்டவாக்க நிறைவேற்று, நீதி அதிகாரங்கள் அனைத்தையும் கொண்ட ஒரு தனிமன்ற சட்டத்துறையை தாபித்தது.

E - நீதி முன் புனராய்வு அதிகாரத்தைக் கொண்ட ஓர் அரசியல் யாப்பு நீதிமன்றத்தை தாபித்தது.

(i) ABCD (ii) BCDE (iii) ABDE (iv) ACDE (v) ABCE

மத்திய பாடசாலைக் கல்விக் கணக்கீடு

## பகுதி - **B**

30. (i) "அரசியல் விஞ்ஞானத்தின் தந்தை" எனக் கருதப்படும் அரசியல் தத்துவஞானியின் பெயரைக் குறிப்பிடுக.
......................................................................................................................................

(ii) நவீன "அரசறிவியலின் தந்தை" எனக் கருதப்படும் அரசியல் சிந்தனையாளரின் பெயரைக் குறிப்பிடுக.
......................................................................................................................................

31. கோட்பாட்டு அரசியல், பிரயோக அரசியல் என்பவற்றின் பண்புகள் ஒன்று விகிதம் குறிப்பிடுக
(i)..................................................................................................................................
(ii)..................................................................................................................................

32. நடத்தை வாத அணுகு முறையின் பண்புகள் இரண்டினை தருக.
(i)..................................................................................................................................
(ii)..................................................................................................................................

33. "குடியரசு" மற்றும் லெவியதன் ஆகிய இரு நூல்களினதும் ஆசிரியர்களின் பெயர்களைத் தருக.
(i)..................................................................................................................................
(ii)..................................................................................................................................

34. அரசியல் கட்சிகளின் பணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
(i)..................................................................................................................................
(ii)..................................................................................................................................

35. கிரேக்க நகர அரசுகளின் பண்புகள் இரண்டு தருக.
(i)..................................................................................................................................
(ii)..................................................................................................................................

36. பாராளுமன்ற அரசாங்க முறைமையின் பண்புகள் இரண்டு தருக.
(i)..................................................................................................................................
(ii)..................................................................................................................................

37. "அரசு நிலையானது", "அரசு பட்டொழிந்து விடும்" என்ற கருத்தை முன்வைக்கும் இரு கோட்பாடுகளையும் பெயரிடுக.
(i)..................................................................................................................................
(ii)..................................................................................................................................

38. முரண்பாட்டின் சாதக மற்றும் பாதக விளைவுகள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.
(i)..................................................................................................................................
(ii)..................................................................................................................................

39. 1833 - கோல்புறூக் - கமரன் சிபாரிசுகள் இரண்டைக் குறிப்பிடுக.
(i)..................................................................................................................................
(ii)..................................................................................................................................

40. 1931 சர்வஜன வாக்குரிமை அறிமுகத்தின் காரணமாக ஏற்பட்ட இரு அரசியல் விளைவுகளைத் தருக.
(i)......................................................................................................................................
(ii).....................................................................................................................................

41. 1948 சோல்பரி யாப்பின் சிறுபான்மை காப்பீடுகள் இரண்டு தருக.
(i)......................................................................................................................................
(ii).....................................................................................................................................

42. 1972, 1ஆம் குடியரசு யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு புதிய அம்சங்களை குறிப்பிடுக.
(i)......................................................................................................................................
(ii).....................................................................................................................................

43. அமுக்க குழுக்களின் பண்புகள் இரண்டை தருக.
(i)......................................................................................................................................
(ii).....................................................................................................................................

44. இரு கட்சி முறைமையின் நிறைகள் இரண்டு தருக.
(i)......................................................................................................................................
(ii).....................................................................................................................................

45. சமஷ்டியாட்சி முறையின் நிறைகள் இரண்டு தருக.
(i)......................................................................................................................................
(ii).....................................................................................................................................

46. ஜனாதிபதி அரசாங்க முறைமையின் குறைப்பாடுகள் இரண்டு தருக.
(i)......................................................................................................................................
(ii).....................................................................................................................................

47. 1948 சோல்பரி மகாதேசாதிபதியின் நிர்வாகத்தின் அதிகாரங்கள் இரண்டு தருக.
(i)......................................................................................................................................
(ii).....................................................................................................................................

48. 1972 யாப்பு ஜனாதிபதியின் சட்டத்துறை சார்ந்த அதிகாரங்கள் இரண்டு தருக.
(i)......................................................................................................................................
(ii).....................................................................................................................................

49. 1972 யாப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் இரண்டு தருக.
(i)......................................................................................................................................
(ii).....................................................................................................................................

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

**NEW** மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம் - கண்டி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - மாதிரி வினாத்தாள் - 2021 / 2022

அரசியல் விஞ்ஞானம் II | 23 | T | II | மூன்று மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள்:**
- இவ்வினாத்தாள் 3 பகுதிகளைக் கொண்டதாகும்.
- இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.
- ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் மொத்த புள்ளிகள் 100 ஆகும்.
- பகுதி - I இல் இருந்து குறைந்த பட்சம் **ஒரு** வினாவையும், பகுதி - II இல் இருந்து குறைந்த பட்சம் **இரண்டு** வினாக்களையும், பகுதி - III இல் இருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து [5]** வினாக்களுக்கு விடை தருக.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## பகுதி - I

5. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் xd;Wf;F விடைத்தருக.
   (i) (அ) அரசறிவியலை வரைவிலக்கணப்படுத்தி அதன் பாடப்பரப்பை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளி)
   (ஆ) பிரயோக அரசியலும் கோட்பாட்டு அரசியலும் (10 புள்ளி)

   (ii) பின்வரும் அணுகுமுறைகளில் இரண்டை விளக்குக.
   (அ) தத்துவார்த்த அணுகுமுறை
   (ஆ) ஒப்பீட்டு அணுகுமுறை
   (இ) நடத்தைவாத அணுகுமுறை
   (ஈ) பெண்ணியல்வாத அணுகுமுறை (10 x 2 = 20 புள்ளி)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் 2 க்கு விடைத்தருக.
   (i) அரசியல் கட்சி என்றால் என்ன? அதனை எவ்வாறு வகைப்படுத்தலாம்.
   (ii) அரசியல் கட்சிகளுக்கும் அமுக்க குழுக்களுக்கும் இடையிலான வேறுபாடுகள்.
   (iii) சிவில் சமூகம்
   (iv) நல்லாட்சி (10 x 2 = 20 புள்ளி)

7. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் 2 க்கு விடைத்தருக.
   (i) மந்திரிசபை அரசாங்க முறையை ஜனாதிபதி அரசாங்க முறையுடன் ஒப்பிடுக.
   (ii) தாராண்மைவாத மற்றும் மார்க்சிய கோட்பாடுகளின் கீழ் பின்வரும் தலைப்புகளை விளக்குக.
   (அ) அரசின் தோற்றம்
   (ஆ) அரசின் வளர்ச்சி
   (இ) அரசின் எதிர்காலம்

   (iii) தேசியவாதம் அல்லது மதச்சார்பின்மைவாதம் (10 x 2 = 20 புள்ளி)

## பகுதி - II

8. கோல்புறூக் - கமரன் சிபார்சுகளை குறிப்பிட்டு அவை இலங்கையின் புது யுகத்தினை ஆரம்பித்து வைத்தது என்ற கருத்தை ஆராய்க. (20 புள்ளி)
9. டொனமூர் சீர்த்திருத்தம் இலங்கைக்கு அரைகுறை பொருப்பாட்சியை வழங்கியது. இக்கூற்றை விளக்குக. (20 புள்ளி)
10. சர்வசனவாக்குரிமைக்கு ஆதரவான மற்றும் எதிரான வாதங்கள். (20 புள்ளி)
11. நிர்வாக குழு முறையின் நிறைகளும் குறைகளும். (20 புள்ளி)

## பகுதி - III

12. 1948 சோலபரி யாப்பின் கீழ் சிறுபான்மை காப்பீடுகள். விமர்சிக்குக. (20 புள்ளி)
13. 1948 சோல்பரி சட்டத்துறையை 1972 சட்டத்துறையுடன் ஒப்பிட்டு விளக்குக. (20 புள்ளி)
14. சோல்பரி மகாதேசாதிபதியை முதலாம் குடியரசு ஜனாதிபதியுடன் பின்வரும் தலைப்புகளின் கீழ் ஒப்பிடுக.
    (அ) அமைவுச்சேர்க்கை
    (ஆ) அதிகாரங்களும் கடமைப் பொறுப்புக்களும்.

மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்